பக்கங்கள்:-பத்து
Registered as a News paper in Sri Lanka
விலை ரூபா. 6.00

# வலம்புரி
The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி 01 | வியாழக்கிழமை (17.07.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 210

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# இடைக்கால சபை வரைபு

# இன்று புலிகளிடம் கையளிப்பு!

## ஜோன் வெஸ்பேர்க் வன்னி செல்கிறார்

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்கென திருத்தி அமைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத் திட்டவரைபை நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் தூதுவரும், சமாதானப் பேச்சுவார்த்தையின் சிறப்புத் தூதுவருமான ஜோன் வெஸ்பேர்க் இன்று வன்னிக்கு எடுத்துச் சென்று விடுதலைப் புலிகளிடம் கையளிக்கவுள்ளார்.**

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஸ்தம்பித்திருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்து விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வரும் பெரும் முயற்சிகளின் முதற்படியாக இடைக்கால நிர்வாகத் திட்டவரைபை நோர்வேயின் முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் இன்று வன்னிக்கு எடுத்துச் செல்கிறார்.

ஜோன் வெஸ்பேர்க்கினால் இன்று எடுத்துச்செல்லப்படவுள்ள இடைக்கால நிர்வாகத் திட்டவரைவு தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கும் அதிகாரம் நிறைந்த திட்டவரைபா அல்லது விடுதலைப் புலிகளினால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட திட்டவரைபை

(10ஆம் பக்கம் பார்க்க)

## தளபதி லெப்.சீலனின் நினைவுநிகழ்வில் பிரபா

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் தாக்குதல் தளபதி லெப்டினன் சீலனின் உருவப்படத்திற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நேற்று முன்தினம் சுடரேற்றி வணக்கம் செலுத்தினார்.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் சிறப்பான முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட இடமொன்றில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் போராளி காண்டீபன் தலைமையில் லெப்டினன் சீலனின் 20 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு இடம் பெற்றது.

லெப்டினன் சீலனின் உருவப் படத்திற்கு அவரது தாயார் ஈகச் சுடரேற்றியதையடுத்து சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியில் இருந்து வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்களின உருவப்படத்திற்கு விடுதலைப் புலிகளின் தளபதிகள் சுடரேற்றி வைத்தனர்.

இந்நிகழ்வில் போராளி அமுதாப் சிறப்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் ''களம் கலந்தும் காலக்கெடுதி'' எனும் நூலை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணித் தளபதி மகிழன் வெளியிட்டு வைக்க விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அதனைப் பெற்றுக்கொண்டார். (ம)



## கண்காணிப்புக் குழுத் தலைவர்
## தளபதி சூசையுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்றிவிக் ரெலிவ்சன் கடந்த மூன்று தினங்களாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், வட முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், கடற்புலிகள் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஆகியோரை மூன்று கட்டங்களாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இரண்டு தடவைகளும், கேணல் தீபனை ஒரு தடவையும், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசையை முல்லைத்தீவு புதுகுடியிருப்பிலும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசையுடனான நேற்றைய சந்திப்பில் கடல்வளம் தொடர்பாகவும், கடற்பரப்பில் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே ஏற்படுகின்ற மோதல்கள் தொடர்பாகவும் மோதல்களைத் தவிர்ப்பதற்கு நடைமுறைப்படுத்தப்படவேண்டிய மாற்றுத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கடந்த திங்கட்கிழமை நடாத்திய பேச்சுவார்த்தையின்போதும் மீண்டும நேற்று சுமார் 3மணி நேரம் இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் போதும் திருகோணமலை கிண்ணியா குரங்குப் பாஞ்சான் பகுதியில் விடுதலைப் புலிகள் அமைத்துள்ள முகாமை அகற்றுவது தொடர்பாகவும், முகமாலைப் பகுதியில் யுத்த சூனியப் பிரதேச முன்னரங்க காவல் நிலையங்கள் விஸ்தரிக்கப்படுவது தொடர்பாக ஆராயப்பட்டதாகவும், எனினும இது விடயத்தில் இணக்கம் காணப்படாத நிலையில் பேச்சுக்கள் முடிவுற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த 3 மாதங்களாக விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் நடத்திய பேச்சுவார்த்தை விபரங்களுடன் நேற்றுக் கொழும்பு திரும்பிய யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலிவ்சன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேசியுள்ளார். (ம)

## சீலன் நினைவுத்தூபி மீசாலையில் திறப்பு

(தென்மராட்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களான லெப். சீலன் (லூ.சாள்ஸ் அன்ரனி-திருகோணமலை), வீரவேங்கை ஆனந்த் (இ.அருள்நாத்-மயிலிட்டி) ஆகியோரின் நினைவுத் தூபி நேற்று முன் தினம் மீசாலையில் திறந்து வைக்கப்பட்டது.

தென்மராட்சியிலுள்ள மீசாலை அல்லாரையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நினைவுத் தூபியை திரை நீக்கம் செய்து வைத்தார்.

இதற்கு முன்பாக இடம்பெற்ற நிகழ்வில் பொது ஈகச்சுடரினை வரணி மகாவித்தியாலய அதிபரும் மாவீரரின் தந்தையுமான எம்.நவரட்ணராஜா ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக கொடியை தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வின் போது மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா, சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் எஸ். பாலச்சந்திரன் ஆகியோர் மாலை அணிவித்தனர்.

(உ-77)

## முகமாலைச் சோதனைச்சாவடியில்
## பயணியிடமிருந்து ரூ.6 ஆயிரம் படையினரால் கொள்ளை

(யாழ்பாணம்)

முகமாலை சேதனைச் சாவடியுடாக யாழ்ப்பணம் நோக்கி வந்த பயணி ஒருவரிடம் இருந்து 6ஆயிரம் ரூபா பணமும் அடையாள அட்டையும் படையினரால் கொள்ளையிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக பணத்தை பறிகொடுத்த பயணி யாழ்.மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இச்சம்வம் கடந்த 13 ஆம் திகதி இடம் பெற்றுள்ளது. முள்ளியவளையைச் சேர்ந்த து.கமலநாதன என்பவரே பணத்தை பறி கொடுத்தவர் ஆவார்.

சம்பவ தினத்தன்று முள்ளியவளையிலிருந்து தொண்டமானாற்றியுள்ள தனது உறவினர்களின் வீட்டிற்கு செல்வதற்காக வந்த பிரஸ்தாப நபர் முகமாலை சோதனைச் சாவாடியில் படையினரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

சோதனை முடிவடைந்ததைத் தொடர்ந்து பயணிப்பதற்காக பேரூந்தில் ஏறி அமர்ந்தபோது அங்கு வந்த இராணுவத்தினர் சிலர் அவரை பேருந்திலிருந்து இறக்கி தனியான அறையொன்றுக்குள் கொண்டு சென்று பயணப்பொதியை மீண்டும் சோதனை செய்ததுடன் அதனுள் இருந்த 6 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்துள்ளனர். பணம் கொள்ளையடிக்கப்பட்டமை தொடர்பாக பொதியைச் சோதனை செய்த சிப்பாயிடம் கேட்டபோது பிரஸ்தாப சிப்பாயினால் தாம் மிரட்டப்பட்டதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது (கு-4)

## அரசு-புலிகள் பேச்சில்
## மத்தியஸ்தராக ஒருபோதும் நோர்வே செயற்படாது!
## தூதுவர் எரிக்சோல் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமதான முயற்சிகளுக்கு நோர்வே அனுசரணையாளராக மட்டுமே செயற்படும். மத்தியஸ்தர்ாக செயற்பட மாட்டாது இவ்வாறு நோர்வேயின் சிறப்புத்தூதுவர் எரிக் சோல்ஹெய்மமண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்கு குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்தோ இலங்கையரசிடமிருந்தோ அல்லது முன்னாள் வெளியுறவுத்துறையமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடமிருந்தோ விமர்சனங்கள் எழுந்தால் அவற்றை பரிசீலிப்போம்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு மேலும் கண்காணிப்பாளர்களைச் சேர்க்கவேண்டுமாயின் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட இரு தரப்பினருமே முடிவு செய்யவேண்டும். இது தொடர்பில் எமக்கு எதுவித ஆட்சேபங்களும் இல்லை என்றும் எரிக்சொல் கூறினார். (ம)

## ஆயுதக் கடத்தல் தொடர்பாக விசாரணை நடக்கிறது
### பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலை மணிராசபுரத்திலுள்ள தமது முகாக்கு விடுதலைப்புலிகள் கனரக ஆயுதங்களை கொண்டு சென்றதாக கூறப்படும் தகவல் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சு தொரிவித்துள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நாதஸ்வர மாமேதை கலாசூரி
# எண்.கே.பத்மநாதன் அவர்களுக்கு
# எமது இதய அஞ்சலிகள்

காரைநகர் பண்டத்தரிப்பான்புலம்
சிவகாமி அம்பிகா சமேத
ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தான
ஆதீன கர்த்தாக்களும்,
தேவஸ்தான பரிபாலன சபையும்
காரைநகர்

வியாவில் ஐயனார்
தேவஸ்தானம்
காரைநகர்

சாரங்கா
நகை மாடம்
157/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சீமாட்டி
(புடவைக் கடல்)
122, மினசார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். 021-222 2196

வெங்கடேஸ்வரா
இல. 125A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021-222 2905

சிறி மாதவன்
இல. 97, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கணேசன் ஸ்ரோர்ஸ்
201, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
021-222 2830

ஜி.எஸ்.லிங்கநாதன்
அன் கோ
13, 14, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். 021-222 3139



## எழில் இசை வேந்தன்

என்றும் எமது வாழ்வின் ஒளிவிளக்காய் வழிகாட்டியாய்இருந்து என் அன்னையால் போற்றப்பட்டவர் எமது அருமை மைத்துனர். என் இனிய குருநாதர் அவர் இவ்வுலக வாழ்வை நீத்து கந்தர்வலோகத்திலே கானமழை பொழியவெனப் போலும் கலாசூரியாய், நாதஸ்வர கான கலாநிதியாய், எழிலிசை வேந்தனாய்ப் போய்விட்டார். அளவையு,ர் இசைநாத வாசத்திலே கருவாகி, உருவாகி, உயிராகி எம் ஈழத் திருநாட்டுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் ஈழத்து இசை வேளாளர் குலத்துக்கும் என்றும் அழியாத புகழையும், பெருமையையும் வாரி வழங்கிய நாதஸ்வர மேதை.

இலண்டன் மாநகரிலே நாம் எங்கு கச்சேரிக்குச் சென்றாலும் எம் இனிய கலாரசிகப் பெருமக்கள் அவரது உடல்நலக் குறைவை அறிந்து எம்மிடம் நலன் விசாரிப்பார்கள். லண்டன் மாநகரிலே முதன்முதலாக நாதஸ்வர இசைக் கச்சேரியை அவருடன் இணைந்து நானும் தவில் வித்துவான்கள் திரு.குமரகுரு, திரு.முருகதாஸ் ஆகியோரும் வெஸ்ட்மினிஸ்டர் மண்டபம் எனும் வரலாற்றுச் சிறப்புவாய்ந்த மண்டபத்திலே நிகழ்த்தினோம். இது பெருமைக்குரிய விடயம். இந்தக் கச்சேரி நடத்தியதால் லண்டன்வாழ் மக்களிடையே அவருக்குப் பெருமதிப்புண்டு. அத்துடன் அவரது நல்லொழுக்கமும் சிறந்த இசைப் புலமையுமே அவரது புகழ் ஏணிக்குக் காரணங்களாகும்.

அவர் நோய்வாய்ப்பட்டிருந்ததைச் செவிமடுத்த உள்ளங்கள் பலஉதவிக்கரம் நீட்டி உதவ முன்வந்தன. ஆனால், அவ்வுள்ளங்கள் இன்று அவர் பிரிவால் ஏங்கி நிற்கின்றன. ஏங்கிநிற்கும் இவ்வுள்ளங்களை ஒருங்கிணைத்து ஒன்றுகூடல் நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்யவுள்ளோம். அவரது உருவப்படம் அருள்மிகு லண்டன் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் உள்ள சிவயோகம் மண்டபத்தில் வைத்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்ச்சி சிவயோகம் அறக்கட்டளை அறங்காவலர் சபைத் தலைவர் சீவரத்தினம் ஐயா அவர்கள் தலைமையில் நடைபெறும். ''தோன்றிற் புகழொடு தோன்றுக அ∴திலார் தோன்றலிற் தோன்றாமை நன்று" என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க வாழ்ந்து, செய்யும் தொழிலே தெய்வம் என்ற கூற்றை இலக்கணமாகக் கொண்டு கடந்த 40ஆண்டுகளாக நல்லைக் குமரனுக்கு நாதோபாசனை செய்துவந்த இசைச் செம்மல் இன்று நம்மெல்லாரையும் விட்டுப் பிரிந்தது இசையுலகுக்குப் பெரிய இழப்பாகும்.

என் குருநாதருடைய ஆன்மாஅவனடியின்கீழ் என்றும் இசைபாடிக் கொண் டிருக்கவேண்டும் எனப் பரமன் பதம் பணிகின்றோம்.

R.கேதீஸ்வரன்
R.ஞானசம்பந்தன்
திருமதி இரத்தினவேல் வேதரத்தினம்

காரைநகர் ஈழத்து
சிதம்பரம்
ஆதீன கர்த்தாக்கள்

காரைநகர் கருங்காலி
போசுட்டி முருகன் கோவில்
தேவஸ்தானமும்
திருப்பணிச்சபையும்

காரைநகர் மணற்காடு
முத்துமாரி அம்மன்
தேவஸ்தானம்

இ.ச.பேரம்பலம்
சக
நிறுவனம்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 - 222 2988

இளவரசி ரெக்ஸ்
நவீன சந்தை,
யாழ்ப்பாணம். 021 - 222 2503

விஷ்ணு பவான்
350, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 021 - 222 5043

அருள்விநாயகர்
மோட்டோர்ஸ்
108, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 - 222 5558


சிவகணேசன்
ஸ்ரோர்ஸ்
41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
021 - 222 2063


# யாழ்ப்பாணம் - வெள்ளாந்தெரு

# மாவடி ஞானவைரவர் ஆலய

# இரதோற்சவ சிறப்பு மலர்

## 17.07.2003





## நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி




இலங்கையில் மகுடம்போல் விளங்குகின்ற யாழ்ப்பாண நகரில் வெள்ளாந்தெரு மாவடி எனும் தலத்திலிருந்து அடியார்களுக்கு வேண்டுவார் வேண்டுவதைக் கொடுத்தருளி பக்தர்களை காத்து ரக்ஷித்து அருள் புரிந்துகொண்டிருக்கும் ஸ்ரீ ஞான வைரவப் பெருமானதுதேர் திருவிழா இன்று நடைபெறுகின்றது.

வைரவப் பெருமானின் திருவருளால் நமது மக்களுக்கு சாந்தியும், சமாதானமும் ஏற்பட்டு எல்லோரும் சகல செல்வங்களையும் பெற்று சிறப்புற வாழ வேண்டுமென்று வைரவப் பெருமானை வேண்டிப் பிரார்த்தித்து ஆசிகள் பல கூறுகின்றேன்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

**நல்லை ஆதீன முதல்வர்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர**
**தேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய சுவாமிகள்**



## ஆலய வரலாறு

"கோவிலில்லா ஊர் அடவி காடு" என்பார்கள். ஓர்ஊரில் ஆலயம் எனவொன்று இருப்பது அவசியம். இதற்கமைய பல ஆண்டுகளுக்கு முன்னர் சிவனடியார் சின்னையா அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயமே வெள்ளாந்தெரு ஸ்ரீ மாவடி ஞானவைரவர் ஆலயமாகும். இவருக்குப் பின் இவரது வம்சாவழி திரு.முத்துக்குமாரு பின்பு இவரது மகன் கனகரத்தினம் ஆகியோரும் தற்பொழுது திரு.கனகரத்தினம் யோகேஸ்வரனும் சீராக ஆலயத்தைப் பரிபாலித்து வருவது யாவரும் அறிந்ததே.

இப்பகுதிவாழ் பொதுமக்களின் ஒன்றுபட்ட நல்ல முயற்சியால் பஞ்சகுண்ட பக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் இவ்வருடம் நடைபெற்றது.

இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம் வைரவப் பெருமானின் அனுக்கிரகத்தால் எந்தவிதத் தடையும் இன்றி சிறப்பாக நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆலயஉற்சவ குருவின் ஆசியுரை

ஸ்ரீ விராட் புருஷனது இடைநாடிஸ்தானமென சாந்தோக்கியம் முதலான உபநிடதங்களில் புகழ்பெற்றதும், பல வைரவஸ்தலங்களை தன்னகத்தே கொண்டதுமான யாழ்ப்பாண நன்நகரிலே மாவடி ஸ்ரீ ஞானவைரவப் பெருமானுக்கு அலங்கார உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இன்றைய தினத்திலே ஆணவ மலத்தை அழிக்கும் உற்சவமாக இரதோற்சவம் நடைபெறுகிறது. இறைவனின் பஞ்ச கிருத்தியங்களான படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் இவற்றில் மிக முக்கியமானது அழித்தல் தொழிலாகும். இத்தொழிலை சிறப்பாக செய்வதன் பொருட்டே இரதோற்சவ விழா நிகழ்த்தப்படுகிறது. ஆகவே, இன்றைய இரதோற்சவ தினத்திலே எல்லா மக்களும் சகல ஐஸ்வரியங்களையும், செல்வங்களையும் பெற்று நீண்ட ஆயுளுடன் வாழவும், நாட்டில் நிலையான சாந்தியும், சமாதானமும் நிலைத்திருக்கவும் எல்லாம்வல்ல ஞானவைரவப் பெருமானை வேண்டி ஆசிகூறி அமைகிறேன்.

சுபம்

**சிவஸ்ரீ கணேசரவீந்திரக் குருக்கள்**
**ஆலய உற்சவ குரு.**

## இந்து கலாசார அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



''கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' கோவில் மணியோசை கேட்காத ஊரில் அசுரத்தனங்கள் குடிகொள்ளும் என்பார்கள். ஆகவே, ஓர் ஊரிலே பெரிய கோவிலோ, சிறிய கோவிலோ ஒன்று அவசியம் இருக்க வேண்டும்.

இந்தவகையில், மாவடியில் குடிகொண்டு மக்களுக்கு அருள் பாலிக்கும் ஸ்ரீ மாவடி ஞானவைரவப் பெருமானின் தேர்த் திருவிழா நடைபெறும் இன்றைய நாளில் வாழ்த்துச் செய்தி வழங்குவதை பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

வைரவக் கடவுள் சத்துவ குணத்தில் தாமதகுணத்தவர். எத்தனை இடர்கள் வரினும் ஆலயப் பணி பழுதுபடா வண்ணம் தொடர்ந்திட எம்பெருமான் அருள்புரிவார் என்பதில் எமக்கு பூரண நம்பிக்கையுண்டு.

வைரவப் பெருமானின் திருவருட் கடாட்சம் கிட்டி நமது மக்களுக்கு நிரந்தர சமாதானமும் சாந்தியும் நிலவவேண்டுமென வாழ்த்துகிறேன்.

**இந்துகலாசார**
**அலுவல்கள் அமைச்சர்**
**தி.மகேஸ்வரன்**

# பாக் - இந்திய சமாதானம் சாத்தியமானதொன்றே

## புதிய இந்திய தூதுவர் கருத்து

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் சமாதானம் ஏற்படுவது நிட்சயம் சாத்திமே என்று பாகிஸ்தானுக்கான புதிய இந்தியத்தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள சிவசங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்துக்கு நேற்று முன்தினம் தனதுகடமைகளைப் பொறுப் பேற்பதற்காக பயணமானபோது இந்திய பாகிஸ்தான் எல்லைப்புறப் பகுதியான வாஹா பிரதேசத்தில அவர் இவ்வாறு ஊடக வியலாளர்களிடம் கருத்துவெளியிட்டுள்ளார்.

பாகிஸ்தானுடனான ஒரு சிநேக பூர்வமான சமாதானச் சூழலை ஏற்படுத்துவதே நோக்கம் என்று குறிப்பிட்ட அவர் தனது இந்தப் பயணம் ஒருசாதகமான இராஜதந்திர நகர்வு என்றும் கூறினார்.

இந்தியாவின் உயரதிகாரி ஒருவர் இவ்வாறு எல்லைப்புறப்பகுதியூடாக பாகிஸ்தான் பயணமகியுள்ளமையானது இரு நாடுகளுக்கும் இடையேயான முரண்பாடுகளுக்குத் தீர்வுகாணும் முயற்சிகளைத் துரிதப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (பி-9)

# இமாச்சல் பிரதேசத்தில் இடிமின்னல் மழையால் 100 பேருக்குமேல் பலி

(புதுடில்லி)

இந்தியாவின் இமாச்சலம் பிரதேசத்தில் நேற்று அதிகாலை ஏற்பட்ட பலத்த இடிமின்னல் மழையில் சுமார் 100 பேர்வரையில் உயிரிழந்ததாக அஞ்சப்படுகின்றது.

இமாச்சலம் கொழுமாவட்டத்தில் விமான நிலையத்திற்கருகிலேயே இந்த இடிமின்னலுடன் கூடிய பலத்த மழை பொழிந்துள்ளது.

உயிரிழந்தவர்களை, மீட்கும் பணியில் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களில் பலர் மின்னலின் தாக்கத்திற்கு தாக்குப்பிடிக்க முடியாமல் உயிழந்திருப்பதாகவும் இவர்களின் உடல்கள் அடையாளம் காண முடியாதவாறு உள்ளதகவும் கூறப்படுகின்றது.

கடந்த சில வாரங்களில் மட்டும் இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் ஏற்பட்ட கடும் வெள்ள பெருக்கினால் 60இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளதுடன் 34இலட்சம் பேர் தமது வீடுகள் வளாப்புப்பிரிவுகள் என்ப வற்றை இழந்துள்ளனர். (பி-2)

# 10ஆயிரம் பேரை நிராயுதபாணிகளாக்க

## கொலம்பியா நடவடிக்கை

(போகோடா)

2005ஆம் ஆண்டளவில் சுமார் 10ஆயிரம் பேரை நிராயுதபாணிகளாக மாற்றும் பொருட்டு சம்பிரதாய பூர்வ சமாதானபேச்சுக்களை ஆரம்பிக்கப்போவதாக கொலம்பிய அரசாங்கமும் வலதுசாரி பரா இராணுவ அமைபினரும் இணக்கம் கண்டுள்ளனர்.

இதற்கான உடன்படிக்கையொன்றிலும் இருதரப்பினரும் கைச்சாத்திட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சமாதான முன்னெடுப்புகளுக்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம பேச்சுவார்த்தைக்கான வாயில் திறக்கப்பட்டுள்ளதாகவும் அந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கைக்கு அமைய கொலம்பியாவிலுள்ள துப்பாக்கி நபர்களிடம் இருந்து இந்தஆண்டின் பிற்பகுதி முதல் ஆயுதங்களைக் களையவும், நடவடிக்கைகளை அந்நாட்டின் ஐக்கிய பாதுகாப்பு படையினர் ஆரம்பிக்கவுள்ளனர். (பி-2)

# சதாமும் சகாக்களும் விசாரிக்கப்படுவதற்கு

## குற்றவியல் நீதிமன்றம்

### ஈராக்கிய புதியநிர்வாகம் ஏற்பாடு

(பக்தாத்)

பதவிகவிழ்க்கப்பட்ட சதாம்ஹுசைனையும் அவரது முக்கிய அதிகாரிகளையும் விசாரணை செய்யும் பொருட்டு யுத்தக் குற்றவியல் விசாரணை நீதிமன்றம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கு அமெரிக்காவின் ஆதரவு பெற்ற ஈராக்கின் புதிய நிர்வாகப் பேரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

சட்டதிட்டங்களுக்கு அமைவாக பதவி கவிழ்க்கப்பட்ட ஈராக் ஆட்சியாளர்கள் அனைவரும் விசாரணை செய்யப்பட்டு தண்டனைக்குட்படுத்தப்படுவார்கள் என்று ஈராக்கின் தற்போதைய நிர்வகப் பேரவையில் அங்கம் வகிக்கும் ஈராக்கிய தேசிய காங்கிரஸ் உறுப்பினர் என்.டி.பர்க்ஹன்டார் கூறியுள்ளார்.

யுத்த மரபுகளை மீறியவர்கள் என்று சந்தேகிக்கப்படுகின்ற நபர்களை விசாரணை செய்வதற்கான புதியசட்டங்களை நிர்வாகப் பேரவையினால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு முன்வைக்கும் என்றும் அவர்கூறினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை உருவாக்கப்பட்ட 25உறுப்பினர் களைக் கொண்ட நிர்வாகப் பேரவை சதாம்ஹுசைனின் பாத்கட்சியை அடியோடு ஒழிக்கும் பொருட்டு ஆணைக்குழு ஒன்றையும் நியமிக்கும் என்றும்அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைக்கான குற்றவியல் நீதிமன்றம் எங்கு அமைக்கப்படும் என்பது தொடர்பான விபரங்கள் எதனையும் அவர் வெளியிடவில்லை. (பி-2)

# டைகிரீஸ் நதிக்கரையில் சதாம் மறைந்துள்ளாராம்

## பிரிட்.நாளிதழ் தகவல்

(லண்டன்)

பக்தாத்துக்கு வடக்கே டைகிரீஸ் நதி அருகே உள்ள கிராமங்களில் ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் பதுங்கியுள்ளார் என்று ஈராக் இராணுவ முன்னாள் உளவுத்துறை ஜெனரல் வஃபிக் அல்-சமராயைமேற்கோள்காட்டி பிரிட்டிஷ் நாளிதழ் திங்கள்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கப் படையினரால் தேடபட்டுவரும் அதிமுக்கிய நபர்களான சதாமும், ரசாயன ஆயுதப்பிரிவின் முன்னாள் தலைவர் 'கெமிக்கல்' அலியும் பாக்தாத்துக்கும் சமர்ரா நகருக்கும் இடையே 60கி.மீ.சுற்றளவுக்குள் உள்ள கிராம பண்ணை வீட்டில் பதுங்கியுள்ளனர்.

ஏனெனில் இந்த கிராமங்கள் அதிக ஜனநெருக்கடி மிகுந்த பகுதி. தேடுதல் வேட்டை நத்துவது மிகவும் கடினம். மேலும் சதாமின் தீவிர ஆதரவாளர்களின் பகுதியாகும் இது என்றும் சமாராய் தெரிவித்துள்ளார். (பி)

# லைபீரியாவிற்கு அமெரிக்கப்படை புஷ் இணங்கியமைக்கு இருதரப்பும் வரவேற்பு

(மன்ரோறியா)

லைபீரியாவிற்குத் தேவையான அமைதிப்படைகளை அனுப்பி வைப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச்.டபிள்யு. புஷ் இணங்கியுள்ளதையடுத்து லைபீரிய அரசாங்கமும் தீவிரவாதிகளும் பெரும் வரவேற்பளித்துள்ளனர்.

எவ்வாறாயினும் லைபீரியாவிற்கு அனுப்பிவைக்கப்படுகின்ற அமெரிக்கத்துருப்புக்கள்கூடிய அதிகாரத்தைக்கொண்டிருக்க வேண்டுமென்று லைபீரியத் தீவிரவாதிகள் கூறுகின்றார்கள்.

லைபீரியாவிற்குச் செல்லவிருக்கும் அமெரிக்கப்படையினரின் எண்ணிக்கையும் அவர்களிற்கான செயற்பாட்டுப்பணிகளும் மட்டுப்படுத்தப்பட்டேயிருக்குமென்று அமெரிக்க ஜனாதிபதி கூறியுள்ளார்.

இதேவேளை தெற்கு ஆபிரிக்க நாடுகளுக்கான பொருளாதார அமையம் அடுத்த சில வாரங்களில் ஆயிரத்து 500துருப்பினர்களை லைபீரியாவிற்கு அனுப்பி வைக்க இணங்கியுள்ளது. (பி-2)

# நாதஸ்வரமேதை என்.கே.பத்மநாதனின் மறைவுக்கு பிரமுகர்கள் விடுத்த அனுதாபச் செய்தி

## சிவத்தமிழ் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி

எமது தமிழ் ஈழ மண்ணின்புழ்பூத்த நாதஸ்வரக் கலாநிதியின் மறைவை எம்மால் தாங்கமுடியவில்லை.

கடந்த 35ஆண்டுகளாக எமது தேவஸ்தானத்தில் மஹோற்சவ காலத்தில் நாத இசையைப் பொழிந்தவர்.

பல தடவைகளில் எமது தேவஸ்தானத்தால் பொற்பதக்கம் சூட்டி பொன்னாடை போர்த்தி எம்மால் பாராட்டப்பட்டவர்.

இன்று தேவ உலகம் அவருடைய கான இசையைக் கேட்க அழைத்து விட்டது போலும்,

அவருடைய இறுதி மூச்சு நல்லூாக் கந்தனின பாதார விந்தத்தை அடைந்து விட்டது. என்ன செய்வோம்! கலைத் தாய் கண்ணீர் வடிக்கிறாள். நாமெல்லாம் உருகி உருகிப்புலம்புகிறோம். அம்பாள் - அன்னாரின் குடும்பத்துக்கும் எமக்கும் ஆறுதல் அளிக்கட்டும்.

## அகில இலங்கைக் கம்பன் கழகம்

தனது 72 ஆவது வயதில் இயற்கை அடைந்துள்ள, உலகப் புகழ்பெற்ற நாதஸ்வர மேதை திருமிகு என்.கே. பத்மநாதன் அவர்களுக்குக் கம்பன் கழகம் தனது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறது.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக அமரர், நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் ஆஸ்தான வித்துவானாக இருந்து ஈழத்து மரபிசைத் துறையின் வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாற்றியுள்ளார். அவர் நாதஸ்வரத் துறையில் உலகளாவிய ரீதியிற் பெற்ற பெரும்புகழ், ஈழத்து இசையுலகத்திற்குப் பெருமை சேர்த்து வந்திருக்கிறது. அமரர் பத்மநாதன் அவர்கள் கம்பன் கழகத்தின் தோற்ற காலத்தில் இருந்தே, கழகத்தின் இசையரங்குகளைப் பெருமை செய்தவர், ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் உற்சவங்களின் போதும், வருடாந்தக் கம்பன் விழாக்களின் திருநாள் மங்கலங்களின் போதும் அமரரின் இசை எம்மையெல்லாம் மெய்சிலிர்க்க வைத்துள்ளது. அமரர் என்.கே.பத்மநாதன் அவர்கட்டு ''கலாசூரி'' விருது வழங்கப்பட்ட பொழுது கம்பன் கழகம் விழா எடுத்துப் பாராட்டியது.

ஈழ இசையுலகையெல்லாம் சோகத்திலாழ்த்தி இயற்கை அடைந்துள்ள என்.கே.பத்மநாதன் அவர்களது ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

## தமிழீழ விடுதலை அணிச் செயலாளர் மா.க.ஈழவேந்தன்

ஏறக்குறைய அரைநூற்றாண்டு, இசையுலகை - நாதஸ்வர உலகைக் கட்டியாண்ட நம் அளவெட்டி பத்மநாதன் இனறு எம்மிடையேயில்லை. ''நேற்று இருந்தவர் இன்று இல்லை என்ற பெருமையுடைத்து இவ்வுலகு'' என்ற வள்ளுவர் வாயமொழிமெய்யாகி விட்டது. ''தோடியைக் கையாண்ட நாதசுர மேதை திருவாவடுதுறை ரி.எம்.இராசரெத்தினம்பிள்ளை மறைந்தையடுத்து ''தோடிப்''

பண் - இராகம் பத்மநாதனில் தஞ்சம் புகுந்து அவரின் குழலில் இருந்து வெளிவந்தது.

''தோடி'' மட்டுமல்ல ''கல்யாணியும்'' அவர் குழலில் கொஞ்சிக் குலாவியது. இவற்றினை இசைக்க இனியார் உளர்.

72வயதில் எம்மை விட்டுப் பிரிந்து விட்டார். 21ஆம் வயதில் நாதஸ்வரத்தை தன் கையிலேந்திய இவ் இசை மேதை இறுதிவரை 50ஆண்டுகள் எம்மை இசை வெள்ளத்தில் மூழ்கடித்தார். எமக்கு அடுத்து, அடுத்து வந்த துன்பங்களைத் துடைக்கும் மாமருந்தாக அவரின இசைமாா விளங்கியது. இந்த இசை மழையைப் பொழிய யார் இனி உளர்?

இவரின் வாரிசாக விளங்கவேண்டிய மகனை 1987இல் இரக்கமற்ற இந்திய இராணுவம் தனக்கு இரையாக்கியது. எதையும் தாங்கும் இதயம் படைத்த இவர் இதனையும் தாங்கிக் கொண்டு நல்லூா முருகனின் கோவிலில் தஞ்சம் புகுந்து தன்னை மறந்து எம்மை வாழ்வித்தார்.

கலைஞர் பலரிடம் இருக்கும் பலவீனம் இவரிடம் இருக்கவில்லை. ஒழுககத்தை உயிரென ஓம்பி வாழ்ந்த பெருமகன், பழகுவதற்கு இனிய பண்பாளன் - சான்றாண்மையின் ஒளி விளக்கு இன்று மறைந்துவிட்டதே.

தேமதுரத் தமிழோசையை - குழல் ஓசையை உலகெங்கும பரப்பிய பத்மநாதன் இன்று நம்மிடையே இல்லை. அவா மறைந்தது உண்மை. ஆனால், அவர் பொழிந்துள்ள இசை மழை வரலாற்றில் இடம்பெற்று எம் வழித்தோன்றல்களை வாழ்விப்பது உறுதி.

## இராமநாதன் நுண்கலைப் பீட இசைவளாகத் தலைவர் மு.நவரெத்தினம்

ஈழத்தின் ஈடிணையில்லாத இசை மாமேதை என்.கே. பத்மநாதன் இறையடி சேர்ந்தசெய்தி இசையறிஞர்கட்கும் ரஸிகர்கட்கும் நெஞ்சில் வேல்பாய்ந்தது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

நாதஸ்வர இசை உலகின் முடிசூடா மன்னனாக ஈழத்திலும் தமிழகத்திலும் தமிழர்வாழும் அனைத்து நாடுகளிலும் அவர் கீர்த்தி பரவியிருந்ததை அனைவரும் அறிவர்.

சிறந்த நல்ஒழுக்கம், ஈஸ்வரபக்தி, ஸ்வரலய இராகபரவாக மேதாவிலாசம் உருப்படிகளின் அக்ஷரசுத்தி நிறைந்த பழுத்த அநுபவமான ஆற்றுகை விலாசம் அனைத்து இராக உருப்படிகளிலும் உச்சமான அபரிமித ஆளுமை, குடிகொண்ட மகோன்னத மகாவித்வ விலாசனாகிய அவரது வாசிப்புக்கு இணை கூறமுடியாது. இவ்வாறான ஒரு நாதஸ்வர மாமேதையை நாம் இழந்துவிட்டோம்.

மிக நீண்டகாலமாக நல்லைக்கந்தன், திருவீதியில் அவரது இசை வெள்ளம் மஹோற்சவ காலங்களில பாய்ந்து ஓடியதை எந்த பக்தனும் மறப்பதற்கில்லை.

யாழ்ப்பாணத்தின் இசைத் தவப்புதல்வராக வாழ்ந்த அம்மாமேதை என்றும் எம்மக்கள் மத்தியில் புகழ் உடலுடன் வாழ்வார் என்பது உண்மை. அவர் ஆத்மா கந்தன் கழலடியில் இசைச் சாயுச்யம் அடைவதாக. அவரது இழப்பு சாதாரண மனித இழப்புகளில் இருந்து மிகப் பெரிய பாரிய வேறுபாடுடையது, ஈடுசெய்யமுடியாதது.

## இன்று ஒரு தகவல்

# வளரும் உறுப்புக்கள்

"இந்த உலகத்தில் பல்லியாகப் பிறந்திருக்கலாம். பாவம் மனிதனாகப்பிறந்து விட்டோன்." என்று கவலைப்பட்டுக் கொண்டே வந்தார் ஒருவர். "ஏன் இப்படி ஒரேயடியாக அலுத்துக் கொள்கிறீர்கள் " என்றேன். பின்னே என்ன சார்! பாருங்கள் எனது கையை. என்று கூறிக்கையைக்காட்டினார். பார்த்தால் விரலில் ஏதோ கட்டுப் போட்டிருந்தார். எங்கேயாவது தவில் வாசிக்கப்போயிருந்தீர்களா? என்றேன்.

என் வயிற்றெரிச்சலைத் தூண்டாதீர்கள். நான் ஏற்கனவே நொந்து போயிருக்கிறேன். என் விரலும் நொந்து போய் இருக்கின்றது என்றார். விரலுக்கு என்ன ஆனதென்று கூறுங்கள் என்று கேட்டேன். கதவின் இடுக்கில் கையை வைத்து விட்டேன். கதவு பத்திரமாகவுள்ளது. விரல் நசிந்து போய் விட்டது என்றார். சும்மா கதவிடுக்கில் கையைவைத்தால் அது நசிந்து போய் விடுமா? என்றேன். ஒரு கையை கதவிடுக்கில் வைத்தேன். அது ஞாபகம் இல்லாமல் மறுகையால் கதவைச்சாத்தினேன். வலித்த பிறகுதான் தெரிந்தது. இன்னொரு கை அங்கே இருக்கிற விஷயம் என்றார். அது சரி இப்போது நிலைமை எப்படி இருக்கின்றது என்றேன். டாக்டரிடம் சென்றேன். படம் பிடித்து பார்த்து விட்டுகெடு விதித்திருக்கின்றார் என்றார். "யாருக்கு?" என்றேன் அதிர்ச்சியுடன். "விரலுக்குத்தான். இந்த விரலை சேர்த்துக்கொள்வதா இல்லை விட்டுவிடுவதா என்று பின்பு முடிவுசெய்யலாம்" என்றார்.

அது இருக்கட்டும் இந்த உலகத்திலே பல்லியாகப் பிறந்திருக்கலாம் என்று புலம்பிக்கொண்டு வந்தீர்களே அது எதற்காக என்று கேட்டேன். "அதே கதவில் ஒரு பல்லி அடிக்கடி வாலைக் கொடுத்து விடுகின்றது. அப்பொழுதெல்லாம் கதவின் இடுக்கில் சிக்கி வால்துண்டாகி விடுகின்றது. ஆனால் பாருங்கள் பல்லிக்கு வால் மறுபடியும் முளைத்து விடுகின்றது. ஆனால் எனது நிலைமையைப் பாருங்கள். இந்த விரலை எடுத்து விட்டால் மறுபடியும் முளைக்குமா? போனது போனது தானே. அதற்குப்பிறகு நான் நான்கு விரலுடன் நடமாட வேண்டியது தான். பல்லியின் வாலை விட மனிதனின் விரல் மட்டமாகப்போய் விட்டதே என்றார்.

அவரது கஷ்டம் அவருக்கு. அதனாலே அவரது பாட்டுக்குப் புலம்பிக்கொண்டேயிருக்கிறார். அவர் ஒரு பக்கம் புலம்பிக்கொண்டே இருக்கட்டும். அதற்கிடையில் நான் உங்களுக்கு ஒரு விடயத்தைக் கூறி விடுகின்றேன்.

மனித உறுப்புக்கள் துண்டிக்கப்பட்டால் அவை மறுபடியும் வளர்வதில்லை. ஆனால் மரக்கிளையை வெட்டினால் அது மீண்டும் வளர்ந்து விடுகின்றது. நம்மிடம் இல்லாதது அவற்றிலே அப்படி என்ன இருக்கின்றது.

தாவரங்கள் வளர்வதற்கு காரணமாக இருப்பது " மெரிஸ்டம்" என்னும் செல்கள். நாம் கிளையை வெட்டினாலும் சரி. இலையை கள்ளினாலும் சரி. இந்த மெரிஸ்டம் செல்கள் சும்மா இருக்காது. உடனேயே வளரத்தொடங்கி விடும். அப்படி வளர்ந்து புதுக் கிளைகளையும், புதிய இலைகளையும் உண்டாககும். எமது உடலில் அது போன்ற மெரிஸ்டம் செல்கள் இல்லை. அதனால் கை, கால் போனால் மறுபடியும் வளரும் அதிர்ஷ்டமும் இல்லை.

பல்லி, மண்புழு இது போன்ற சில விலங்கு இனங்களுக்கும் இந்த செல் உள்ளது. அதனால் தான் பல்லி கவலைப்படாமல் கதவின் இடுக்கில் போய் வாலைவைக்கின்றது. வால் துண்டாய் போனாலும் "செயற்கை வால் எங்கு கிடைக்கும் என்று தேடிக்கொண்டு போகவேண்டிய அவசியம் அதற்கில்லை.

என்ன யோசிக்கின்றீர்கள். நமக்கும் மெரிஸ்டம் செல் இருந்தால் நன்றாய் இருக்கும் என்றா? கதவிடுக்கில் ஒரு கை இருக்கும் பொழுது மற்றொரு கையால் அதே கதவைச் சாத்தக் கூடாதென்று தெரியவில்லை என்றால் அவன் என்ன மனிதன்?

ஆனால் ஒன்று காலம்போகிற போக்கில் வன்முறைகள் அதிகமாகி விட்டது. மனிதன் அடிக்கடி கையை இழப்பதுவும், காலை இழப்பதுவும் சகஜமாகி விட்டது. செயற்கை கால், செயற்கை கை என்று தேடி அலைய வேண்டிய அவசியமும் ஏற்பட்டு விட்டது. அதனால் இனிப்பிறக்கின்ற மனிதர்கள் மெரிஸ்டம் செல்லுடன் பிறந்தால் நன்றாக இருக்கும். படைப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற கடவுளுக்கு இந்தத் தகவல் காதில் விழுந்தால் ... மனிதனின் இந்தக்கோரிக்கையை அவசியம் அவன் பரிசீலனை செய்ய வேண்டும்

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# ஸ்தாபனக் கோவை காலத்துக்கு ஏற்றவகையில் திருத்தி அமைப்பு

## அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்தாபனக்கோவை காலத்துக்கு ஏற்றவகையில் திருத்தி அமைக்கப்படும் என பொது நிர்வாக முகாமைத்து அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர்,

அடுத்த ஆண்டு முதல் சுயாதீனமான அரசாங்க சேவையை நடைமுறைப்படுத்துவதற்கே ஸ்தாபனக் கோவை திருத்தி அமைக்கப்படவுள்ளது.

இக்கோவையின் தற்போதைய நிதிப்பிரமாணங்கள் சுமார் 10 இலட்சம அரச ஊழியர்களை கைதிகளாக மாற்றியுள்ளன.

வரவுப் பதிவேடுகள், நேரத்தை பதிவு செய்யும் அட்டைமுறைகள் போன்ற பயனற்ற நடைமுறைகளை அரசாங்க சேவையிலிருந்து நீக்கி, நாட்டுக்கு நன்மைபுரியும் ஊழியர்குழாம் ஒன்றை அரச நிறுவனங்களில் உருவாக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் இன்னும் இரு மாதங்களுக்குள் நக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (தி)

# குடாநாட்டில் குடிசைக் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க அனைவரும் முயல வேண்டும்

## அரச அதிபர் அறைகூவல்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக்குடாநாட்டில் இனிமேல் குடிசைக் கலாசார வாழ்வுக்கு இடமளிக்கக்கூடாது. உலகம் கிராமமாக மாறிவருகினற வேளையில் நாம் எமது மக்களை உலக வாழ்க்கைத்தரத்திற்கு உயர்த்துவதற்கான முன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.


யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்தமநாதன், யாழ். அரச செயலகத்தில் கடந்த திங்களன்று நடைபெற்ற வீட்டுத்திட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பங்குகொண்டு உரை நிகழ்த்தும்போது இவ்வாறு குறிப்பிட்டார்.

யு.என்.எச்.சீ.ஆர்., சிறுவர்பாதுகாப்பு நிதியம், ஜீ.ரீ.சற், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், அறவழிப்போராட்டகுழு, அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், போரூட் உட்பட பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்குகொண்டிருந்த இக்கூட்டத்தில் அரச அதிபர் தொடர்ந்தும் குறிப்பிடும்போது,

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வீடுகள் புனரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களுக்குமிடையில் ஒரு புரிந்துணர்வையும், இணைப்புச் சேவையையும் ஏறபடுத்தும் நோக்குடன், இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வீடுகள அமைக்கும் விடயத்தில் தனித்து இயங்குவதிலும்பார்க்க ஒருங்கிணைந்து செயறபடுவதன் மூலம், பயனாளிகளுக்கு நல்ல பலனைக் கொடுக்க முடியும்.

அதற்போது குடாநாட்டிலுள்ள இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களிலுள்ள குடும்பங்களுக்கு அரை நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு யு.என்.எச்.சீ.ஆர். நிறுவனம் முன் வந்துள்ளது. குடாநாட்டில் எந்த நிறுவனம் வீடுகள் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டாலும், அவை இவ் ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியுடன செய்வதையே நான் பெரிதும் விரும்புகின்றேன்

ஏனெனில், நான் இங்கு நடைபெறுகின்ற அனைத்துத் திட்டங்களுக்கும் பதில் கூறவேண்டிய நிலையிலேயே இருக்கிறேன். நான் அரசுக்கும் பதில்சொல்ல வேண்டியவனாகின்றேன். மேலும் யாழ். குடாநாட்டில் வீட்டுத்திட்டப் பணியில் ஈடுபடும் நிறுவனங்களின் செயற்பாடுப் புள்ளி விபரங்கள் மற்றும் தகவல்களை ஒருங்கிணைக்கும் பணியில் யு.என்.எச்.சீ.ஆர். நிறுவனம் தொடர்ந்தும் ஈடுபடும் எனக் குறிப்பிட்டார்.



இவ்ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஜீ.ரீ.சற் நிறுவனத்தின் யாழ். தலைவர் கலாநிதி அடிவாக்கர் உட்பட வேறும் பலர் பங்கு கொண்டிருந்தனர். (உ-77)

## இராசி பலன்

17.07. 2003

(ஆடி 01, வியாழன்)

சதுர்த்தி- மு.இ. 10.51வரை
சதயம்- பி.இ. 1.31வரை
இராகுகாலம்- 1.30-3.00
சுபநேரம்- 7.30-9.00
சங்கடகர சதுர்த்தி விரதம்
ஆடிப்பிறப்பு

**மேடம்**
குடும்ப மகிழ்ச்சி, இலட்சுமிகரம், சொத்துக்களால் நன்மை, போசனசுகம்.

**இடபம்**
உற்சாகமான நிலை, சுபநிகழ்வு, திடீர் பயணம், நல்ல முயற்சி.

**மிதுனம்**
உடல் உழைப்பு , சிந்தனை மிகுதி, காரிய தாமதம், ஆன்றோர் மதிப்பு.

**கடகம்**
உடல் வியாதி, மனஸ்தாபம், காரிய தடங்கல், போசன சுகம்.

**சிங்கம்**
கௌரவமான நிலை, கலந்துரையாடல், காரிய அனுகூலம், புதிய பொருள் சேர்க்கை.

**கன்னி**
எடுத்த கருமங்கள் கைகூடும், சுக வாழ்வு, பிறர் உதவி, சொத்துக்களால் நன்மை.

**துலாம்**
செய்தொழில் நன்மை, புத்திரரால் கவலை, சிறு வியாதி, முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
மாணவர் கல்வியில் ஆர்வம், தர்மம், நிலைமாற்றம், காரியதாமதம்.

**தனுசு**
சுவாரஸ்யம், துணிச்சலான செயற்பாடு, பிறர் ஒத்துழைப்பு, காரிய சித்தி.

**மகரம்**
கடுமையான வார்த்தை, வீண் செலவு, வேலைக்கஷ்டம், போசன சுகம்.

**கும்பம்**
கற்பனை மிகுதி, பெரியோரால் மதிக்கப்படுதல், தொழில் விருத்தி, முயற்சி பலிதம்.

**மீனம்**
தந்தை வழி உறவு, கோபப்படுதல், பிரயாண அலைச்சல், உடல் நலக்குறைவு

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

# படையினரின் கெடுபிடிகள் குறித்து கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் அரசியல்துறை முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் நேற்று முன்தினம் பெருமளவில் குவிக்கப்பட்டு, கடுமையான வீதிச்சோதனைகளை மேற்கொண்டனர்.

வடமராட்சி வதிரிச் சந்தி மற்றும் முள்ளி வெளி ஆகிய இடங்களில் இச்சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

வாகனங்கள் மறிக்கப்பட்டதுடன் பயணிகள் இறக்கப்பட்டு பொதிகளும் கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறுவதாகவும் இது சமாதான முயற்சியைப் பாதிப்பதாகவும் தெரிவித்து, வடமராட்சி கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளரினால் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், கடும் கண்டனத்தையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். (உ-5)

# யாழ்.மாவட்டத்தில் அடிப்படைச் சுகாதார செயற்றிட்டங்கள் அமுல்

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் நோய்த்தடுப்பு மற்றும் அடிப்படை சுகாதார வசதிகளை ஏற்படுத்தும் நோக்கில், பல செயற்றிட்டங்கள் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் செயற்படுத்தப்பட்டுள்ளன.

இச்செயற்றிட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் யாழ்.பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் யுனிசெவ் நிறுவன உயர் அதிகாரிகள், சுகாதார திணைக்கள உயர் அதிகாரிகள் மற்றும் வைத்திய அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இது சம்பந்தமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள விடயங்கள் தொடர்பாக பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதன்பிரகாரம் யாழ். மாவட்டத்திலுள்ள தாய், சேய் நல சிகிச்சை நிலையங்களுக்குத் தேவையான உபகரணங்கள், கருவிகள் என்பவை வழங்கப்படவுள்ளன.

அத்துடன், ஆரம்ப சுகாதார சேவைப் பணிப்புக் கடமைகளில் ஈடுபடும் வெளிக்களச் சுகாதார ஊழியர்கள், கிராமிய சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோருக்கு சேவைக் காலப் பயிற்சிகள் மற்றும் புதிய விடயங்கள் தொடர்பான விரிவுரைகள் ஆகியன வழங்கப்படவுள்ளன.

இத்திட்டம், இவ்வருட இறுதிக்குள் செய்துமுடிக்கப்படவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (

# சிறந்த நாடுகள் பட்டியலில் இலங்கை 99வது இடம்

(கொழும்பு)

உலக மக்கள் வசிப்பதற்கேற்ற சிறந்த நாட்டுப்பட்டியலில் நோர்வே முதலாவது இடத்தையும் இலங்கை 99வது இடத்தையும் பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள பட்டியலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நாட்டினதும் தனிநபரது வருமானம், ஆயுட்காலம் போன்றவற்றின் அடிப்படையிலேயே இந்தப்பட்டியல் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

175 நாடுகளை உள்ளடக்கிய இப்பட்டியலில் ஐஸ்லாந்து 2வது இடத்தையும், சுவீடன் 3வது இடத்தையும், அமெரிக்கா 7வது இடத்தையும், பிரிட்டன் 13வது இடத்தையும்,தென்னாபிரிக்கநாடுகள் 111வது இடத்தையும் பெற்றுள்ளன.

இதேவேளை,இந்தியா, பாகிஸ்தான் போன்ற சார்க்அமைப்பைச் சேர்ந்த நாடுகளை விட இலங்கை இப்பட்டியலில் முன்னிலையில் இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கவை.(உ-10)

## யாழ் நகர வீதிகளில்

# ஒழுங்கீனமாக நிறுத்தப்படும் வாகனங்களால் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரப்பகுதிகளில் வாகனங்களின் போக்குவரத்து அதிகரித்துள்ள இந்நிலையில் அவ் வாகனங்களை வாகனத்தரிப்பிடம் அல்லாத யாழ்.நகரின் வீதி ஓரங்களில் நிறுத்தி வைக்கப்படுவதால் அப்பகுதிகளால் மக்கள் பிரயாணம் செய்வதற்கு பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

குறிப்பாக யாழ்.போதனா வைத்தியசாலைவீதியில் ''ஹயஸ் வான்கள்'',ஓட்டோக்கள் என்பன அதிக எண்ணிக்கையில் வீதியின் குறுக்கே பல்வேறு இடங்களில் தரித்து நிறுத்தியுள்ளதைகாணக் கூடியதாகவுள்ளது.

அதேபோல, யாழ். மின்சார நிலைய வீதியையும், ஸ்ரான்லி வீதியையும் இணைக்கும் பிரதான தபாலகத்திற்கு முன்பாக செல்லும் வீதியிலும் மினி பஸ்கள் பல ஒழுங்கீனமான முறையில் தரித்து நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் அப்பகுதிகளால் பயணம் செய்யும் மக்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகின்றனர்.அதேவேளை, இதன் காரணமாகவே,சனநெருக்கடி ஏற்பட்டு விபத்துக்கள ஏற்படுவதையும் காணக் கூடியதாகவுள்ளது. (உ-15)

# காரைநகருக்கு தனியான பிரதேச சபை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்ககுழு

(யாழ்ப்பாணம்)

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபை சட்டத்தின் கீழ் காரைநகர் பிரதேசத்தில் புதிதாக பிரதேச சபை ஒன்றினை அமைப்பது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக உள்நாட்டலுவல்கள்,மாகாணசபை,உள்ளூராட்சி அமைச்சினால் 3அங்கத்தவர்கள் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,மேற்படி பிரதேச சபை அமைப்பது தொடர்பாக பொது மக்கள் மற்றும் நிறுவனங்கள் தங்கள் கருத்துக்களை முன் வைக்க விரும்பின் எதிர் வரும்30 ஆம்திகதி புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெறும். மேற்படி குழுவின் விசாரணைக்கு சமுகமளிக்குமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் கேட்டுள்ளார். (உ)

## முன்பள்ளி ஆசிரியர் நலன் பேண

# உலக உணவுத்திட்டத்தின் உதவி நாடப்பட்டது

(பளை)

பச்சிளைப்பள்ளி பிரதேச சபை எல்லைக்குள் இயங்கி வருகின்ற முன்பள்ளிகளில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்கள் எந்த விதமான கொடுப்பனவும் பெறாது சேவையாற்றி வருகின்றனர்.


மேற்படி பிரதேச சபையில் பெருத்த நிதி நெருக்கடி நிலவுவதன் காரணமாக மேற்குறிப்பிட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அவர்கள் ஆற்றுகின்ற சேவைக்கு எது விதமான கொடுப்பனவும் வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது.

சேவை மனப்பான்மையுடனும் நாட்டுப்பற்றுடனும் தங்களது பணியை முற்றிலும் இலவசமாக வழங்கி வருகின்ற மேற்படி ஆசிரியர்களின் பணிக்கு உந்து சக்தியளிக்கும் வகையிலும் அவர்களுக்கு உலக உணவுத்திட்ட மூலமாக உதவிகளை வழங்குமாறு சம்பந்தப்பட்ட பிரதேச சபையின் செயலாளர் து.சிவராசா வவுனியாவிலுள்ள உலக உணவுத்திட்ட உப அலுவலகத் தலைவரிடம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-97)






யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையை நிறுவனமயப்படுத்துவதை கண்டித்து மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருப்பதையும் நிர்வாகச் செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதம்அடைந்திருப்பதையும் படங்களில் காணலாம்.




# செய்தித் துளிகள்

## காணிப் பகிர்வுக் கூட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவுப் பிரதேசத்தில் தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகள் பகிர்ந்தளிப்பது தொடர்பான கூட்டம் ஒன்று, வவுணதீவு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் சார்பில் மட்டு-அம்பாறை அரசியல் துறைப்பொறுப்பாளர் தலைமையிலான குழுவினரும் முஸ்லிம்களின் சார்பில் பசீர்சேவுதாவுத் தலைமையிலான குழுவினரும் மட்டக்களப்பு அரச அதிபர் ஆர். மௌன குருசாமியும் கலந்து கொண்டனர். (ம)

## யோகாசன படக்காட்சியும் கருத்துரையும்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தைஒட்டி யோகாசன வாழ்வியல் என்னும் தலைப்பில் கருத்துரையும் யோகாசன பயிற்சி தொடர்பான படக்காட்சியும் இன்று மு.ப. 10.30 மணிக்கு வேலணை பிரதேசசபைத் தலைமை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பிரதேச சபையின் செயலாளர் செ. சண்முகராஜா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் கருத்துரையை யோகாசன போதனாசிரியர் வி.என். சிவனேஸ்வரராஜா நிகழ்த்தவுள்ளார். (உ)

## காணி அமைச்சர் திருமலை செல்வார்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்ட மக்களின் காணிப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் பொருட்டு எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காணி அமைச்சர் ராஜித சேனாரத்னா திருகோணமலை மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட அரச அதிபர் பி.கெ.நெலும்தெனிய இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்.

காணி அமைச்சரின் மேற்படி விஜயத்தின் போது திருகோணமலை மாவட்டத்திலுள்ள இடம் பெயர்ந்த மக்களின் காணி விபரம், பயிர்ச் செய்கை பண்ணப்படாத வயல் காணிகளின் விபரம், குடியிருப்புக் காணி விபரம் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் உள்ள காணிகள் பற்றிய விபரங்கள் என்பன பற்றி விரிவாக ஆராயப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் நெலும்தெனிய தெரிவித்துள்ளார்.(உ-10)

## செய்யுளியலும் அணியியலும் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் அளவெட்டி மகாஜன சபையும் இணைந்து நடத்தும் அளவையூர் பண்டிதமணி க.நாகலிங்கத்தின் செந்தமிழ் இலக்கண விளக்கம் இரண்டாம் பாகம் ''செய்யுளியலும் அணியியலும்'' நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு அளவெட்டி மகாஜன சபை வாசிகசாலை மண்டபத்தில் கலாநிதி எஸ். சிவலிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, அருட்புலவர் பண்டிதர்அ. ஆறுமுகம் முதுபெரும்புலவர் வை.க.சிற்றம்பலம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனா.

நூல் வெளியீட்டுரையை முன்னாள் பிரதிக்கல்வி பணிப்பாளர் கவிஞர் சோ. பத்மநாதனும் நயப்புரைகளை சைவப்புலவர் சு. செல்லத்துரை,பண்டிதர் ம.ந. கடம்பேஸ்வரன், பண்டிதர் வ.பேரின்பநாயகம், கவிஞர் கல்வயல் வே.குமாரசுவாமி, விகடகவி மு.திருநாவுக்கரசு ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (உ-8)

## மீராவோடையில் மீள் குடியேற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மீராவோடை கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் கடந்த திங்கட் கிழமை முதல் மீள குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

இம் மீள் குடியேற்ற முதற்கட்ட நடவடிக்கைகளுக்காக நிக்கொட் திட்டதின் கீழ் 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த கால வன்முறைச் சம்பவங்களைத்தொடர்ந்து, இக் கிராமத்திலிருந்து 450 தமிழ் குடும்பங்கள் இடம்பெயர்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## மாடிக்கட்டட அமைப்பு பூர்த்தி

(பருத்தித்துறை)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் குறைநிலையில் இருந்த இரு மாடிக்கட்டடம் சுமார்35 இலட்சம் ரூபா செலவில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

இம்மாடிக் கட்டடம் ஏற்கனவே சுமார் 35 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு குறை நிலையில் இருந்தது. இதற்கான நிதியுதவிகளை நிக்கொட் நிறுவனம் வழங்கியிருந்தது. இக் கட்டடத்திலே கணனி நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-52)

## அலங்கார உற்சவம்

சண்டிலிப்பாய் வடக்கு இரட்டையபுலம் ஞான வைரவர் தேவஸ்தான அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. (உ-102)

## தாச்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி,வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தாச்சிச்சங்கம் கட்டுடை விநாயகர் மைதானத்தில் நடத்தி வரும் தாச்சிச்சுற்றுப்போட்டியில் இன்று மாலை 4.30 மணிக்கு அரியாலை காந்தி விளையாட்டுக் கழகமும் உடுவில் சிந்து விளையாட்டுக்கழகமும் பங்குபற்றவுள்ளனர். (உ-10)

## மரக்கன்றுகள் இலவச விநியோகம்

(அளவெட்டி)

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி வேலணைப்பிரதேச சபைப்பிரிவில்உள்ள மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு உப அலுவலகங்கள் ஊடாக பயன் தரும் மரக்கன்றுகள் இலவசமாக மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுவருகின்றன. (உ-83)

## சட்டவிரோத இறைச்சி அழிப்பு

(யாழ்ப்பாணம்)

போயாதினமான கடந்த ஞாயிற்றுக்கிழமை மாநகரசபை எல்லைக்குட்பட்ட பல்வேறு இடங்களில் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்ட 120 கிலோ மாட்டிறைச்சி சபையின் பிரதம பொதுச்சுகாதார பரிசோதகர் மற்றும் கொல்கள மேற்பார்வையாளர் ஆகியோரால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறி வித்துள்ளார். (உ)

## நடமாடும்சேவை

(யாழ்ப்பாணம்)

தேசிய அடையாள அட்டை வழங்குவது தொடர்பான நடமாடும் சேவை நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணி தொடக்கம் யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விடயம் சம்பந்தமான மேலதிகத் தகவல்களை தத்தமது பிரிவு கிராம சேவையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறும் இச் சேவையைப்பயன்படுத்தி பொது மக்கள் உச்சப்பயன்பாட்டை பெற்றுக கொளளுமாறும பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் கேட்டுள்ளார். (உ)

## வீடமைப்புத் திட்டம்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் 2ஆயிரத்து 500 வீடுகள் அமைக்கும் திட்டம் அடுத்தமாதம் முதல் அமுலாகும் என மேல் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் எம்.எச் முகமட் தெரிவித்துள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு இதற்கான நிதி வழங்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்ட மேல் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் முகமட் கொழும்பிலுள்ளபிரதான பஸ் தரிப்பிடங்களையும் புனரமைக்கப்படவுள்ளதாக தெிவித்தார். (உ-10)

# அழிவுகளையும், தாக்கங்களையும் மையப்படுத்திய போர்க்கால இலக்கியம் ஈழத்தில் எழுச்சி பெற்றது

**விழிமைந்தன்**

> அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன்மாநகரில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் விழாவில் இக்கட்டுரை சமர்ப் பிக்கப்பட்டது.
> இககட்டுரையிலேகுறிப்பிட்டுள்ளபடி கடந்த தசாப்தத்தில் ஈழத்தமிழ் போர்ககால இலக்கியம்பற்றி அவுஸ் திரேலியாவில் வாழும் நம்மவர்களுக் குத் தெரிந்திராத சில பக்கங்களைத் திறந்துகாட்டுவதே நோக்கம்.

கடந்த இரண்டு தசாப்த காலமாகத் தொடர்ந்துவந்த கொடிய போரின் காரணமாக ஈழத்தமிழ் மக்கள் பலவிதமான நெருக்கீடுகளைத் தமது வாழ்வில் எதிர்கொண்டு வந்தனர். இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி ஆதலால், இந்த நெருக்கீடுகள் ஈழத்தின் இலக்கிய வளர்ச்சிப் போக்கிலும் பெரும் மாறறங்களை ஏற்படுத்தின. போர் உச்சக் கட்டத்தை அடைந்த தொண்ணூறுகளில், விடுதலைப்போராட்டத் துக்கு எழுச்சி ஊட்டும் இலக்கியங்களும் போர் ஏற்படுத்திய தாக்கங்களையும் அழிவுகளையும் மையப் படுத்திய இலக்கியங்களும் சேர்ந்த போர்க்கால இலக்கியம் ஈழத்து இலக்கியவானில் எழுச்சிபெற்றது.

போரின் நேரடிப் பாதிப்பிற்கு உட்பட்டது இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதி. ஆதலின் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள படைப்புகளிற் பெரும்பாலானவை இப்பகுதியில் இருந்து எழுந்தவையாகவே உள்ளன.

விடுதலைப்போராட்டத்திற்கு உரம சேர்க்க எழுந்த இலக்கியங்கள் எனவும், போர் ஏற்படுத்திய அழிவுகளையும் துன்பங்களையும் கூறும் இலக்கியங்களெனவும் இன்னொரு வகையாக இவற்றைப் பகுக்க முடியும். முதல்வகை இலக்கியங்கள், விடுதலைக்கான கருவி என்றவகையிலே போரை வரவேற்பவையாக அமைவதும், இரண்டாம் வகை இலக்கியங்கள், அழிவின் மூலம் என்றவகையிலே போரை நோக்கி அதன் முடிவிற்கு அறை கூவுபவையாக அமைவதும் நோக்கத்தக்கது.

**புனைகதைகள்**

மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் வெளியான சிறுகதை-நாவல்களிற் பெரும்பாலனவை போரின் துன்ப துயரங்களையும் அழிவுகளையும் கூறுபவையாகவே உள்ளன. கவிதைகள், நாடகங்கள் ஆகியன வடிவங்களிற் போல், போராட்டத்தை ஊக்குவிக்கின்ற படைப்புகள் சிறுகதை நாவல்களில் அதிகம் உருவாகவில்லை. கவிதைக்குரிய சொற்செட்டோ, நாடகத்திற்குரிய கட்புலச் செய்திப்பரிமாற்ற ஆற்றலோ புனைகதைகளுக்கு இல்லாத காரணத்தால், சாமானிய மக்களின் மனதில் போராட்டத்திற்கான எழுச்சியை விரைவாக ஏற்படுத்தும் ஆற்றல் இந்த வடிவத்திற்கு இல்லை என்று கருதப்பட்டமை இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். அரசியற் தொடர்புகள் அதிகமின்றிச் சாதாரண மனிதர்களாக வாழ்ந்த ஈழத்து எழுத்தாளர்கள தம்மைப்போன்ற சாதாரண மக்களுக்குப் போர் கொண்டு வந்த துன்பங்களை இவ்வடிவம் மூலம் வெளிப்படுத்தினர்.

செங்கை ஆழியான் இக்காலப் பகுதியில் மிகப்பெருமளவு ஆக்கங்களைத் தந்த எழுத்தாளர்களுள் ஒருவர். இவரது 'இரவுநேரப் பயணிகள்' தொகுப்பு 91-95ஆம் ஆண்டுக் காலப்பகுதியிற் கடல் நீரேரிப் போக்குவரத்திலும் ஏனைய அம்சங்களிலும் யாழ்.மக்கள் பட்ட சிரமங்களை வெளிக்கொணர்வதாக அமைந்தது. இவரது 'அக்கினி' நாவல் ஒருவிதத்திலே விடுதலைப் போராட்டத்தை ஊக்குவித்தது. யுத்தகாலப் பதிவுகளை இலக்கிமாக்கி ஆவணப்படுத்தும் பணியைச் செய்தமைக்காக இவர் நிச்சயம் குறிப்பிடப்பட வேண்டியவர்.

கோகிலா மகேந்திரன், போர்க்கால வாழ்வியற் பிரச்சினைகளை உளவியற் கண்ணோட்டத்துடன் அணுகியுள்ளார். இவரது 'வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்' தொகுப்பில் உள்ள 'சர்ப்ப மரணம்' என்ற குறியீட்டுக்கதையும், 'எரியும்' என்ற கதையும் விமானத் தாக்குதல்களின் அனர்த்தங்களை அழுத்தமாகச் சித்தரித்தன. இடம்பெயர்ந்த மக்களின் அவலங்களை இவரது கதைகள் கலை நயத்துடன் ளெிக்கொணர்ந்துள்ளன. இவரது கதை மாந்தர் பெரும்பாலும் ஒரு புத்திஜீவியின் நிலையிலிருந்து சிந்திப்பவர்களாக உள்ளனர். சிதம்பர. திருச்செந்திநாதன் போன்றவர்கள் எழுதிய நாவல்கள் மிகச் சாதாரண மக்களைக் கதை மாந்தராகச் சித்தரித்தன. சாந்தன் எழுதிய 'காலங்கள் மாறும்' போன்ற சிறுகதைகள் எதிர்காலத்தின் மீதான பிடிப்பையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தின.

இக்காலப்பகுதியில் மல்லிகை, வெளிச்சம் ஆகிய இதழ்கள் சிறு கதைகளுக்கு-குறிப்பாக இளந் தலைமுறையினரின் சிறுகதைகளுக்கு-காத்திரமான களம் நல்கின. மூத்த எழுத்தாளர்கள் ஒருவிதமான விரக்தி மனப்பாங்குடன் எழுதிய வேளையிலே இளந்தலைமுறையினர் எதிர்காலத்தின்மீது நம்பிக்கையை ஊட்டும் விதமாக எழுதியதையும், தமது கதைகளுக்கு மகிழ்ச்சிகரமான முடிவுகளைக் கொடுத்தத்தையும் அவதானிக்க முடியும்.

**கவிதைகள்**

ஈழத்திலே நிலவிய போர்க் காலச் சூழ்நிலையானது வேறெந்த வடிவத்தையும்விடக் கவிதை வடிவத்திலே உணர்ச்சி பூர்வமாகவும் அழுத்தமாகவும் பதிவுசெய்யப்பட்டது எனறு கூறலாம். கவிதை உணாவின் மொழி. எனவே யுத்தஅனர்த்தங்களால் குமுறுகின்ற படைப்பாளியின் உணர்ச்சிகள், கவிதை வடிவத்தில் எரிமலையென் வெளிவந்தன. இதனால் ஈழத்துக கவிதைகளின் தரமானது எண்பதுகளிலும் பின்னர் தொண்ணூறுகளிலும் புதிய உச்சங்களைத் தொட்டது. யுத்தத்திற்கு அழைக்கின்ற வீரக்கவிதை, யுத்தத்தின் அழிவுகளைப் பாடுகின்ற சோகக் கவிதை ஆகிய இரு வகைகளிலும் கவிதை வெள்ளம் பொங்கிப் பிரவாகித்தது.

முதல்வகைக் கவிதைகளுக்கு மிகப்பெரிய பங்களிப்பைச் செய்தவர் புதுவை இரத்தினதுரை அவர்களாவர். இவரது கவிதைகளிற் பல இசையமைக்கப்பட்டு பாடப் பட்டதனால் அவை மூலைமுடுக்கெங்கும் சென்று,குறிப்பாக இளைஞர்களின் சிந்தனைப் போக்கிற் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின. இதனை, தூங்கிக் கிடக்கும் இளைஞர்களை எழுப்பும் ஒரு பணியாகப் புதுவை கருதினார் என்பதை அவர் பாடிய பள்ளியெழுச்சிப் பாடல்கள் காட்டுகின்றன.

'போற்றி எம் வாழ்முதலாகிய பொருளே...'

என்று பரம்பொருளுக்குப் பள்ளி எழுச்சி பாடும் மாணிக்கவாசகர் போல.

'போற்றி எம் வாழ்முதலாகிய தமிழே
புலர்ந்தது புதியதோர் நாளெனும் பொழுதே
காற்றிடை மரமெனச் சுழன்ற நம்வாழ்வு
கழிந்தது; குண்டுகள் பாய்ந்திடும் தேசம்
நேற்றோடு போனது; நிமிர்ந்தது நெஞ்சம...'

என்று பாடுகிறார் புதுவை.

மகாகவி பாரதியும், சுதந்திரப் போரை முன்நிறுத்திப் பாரத மாதாவிற்குப் பள்ளியெழுச்சி பாடிஇருக்கிறார்.

'பொழுது புலர்ந்தது யாம்செய் தவத்தால்
புன்மையிருட்கணம் போயின எங்கும்
ஏழுபசும் பொற்சுடர் எங்கணும் பரப்பி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி
தொழுது உனைவாழ்த்தி வணங்குவதற்கு
- உந்தன்
தொண்டர் பல்லாயிரவர்சூழ்ந்து நிற்கின்றார்
விழி துயில்கின்றனை இன்னமும் தாயே
வியப்பிது காண் பள்ளிஎழுந்தருளாயே

என்று தொடர்ந்து பாடுகிறார் பாரதி. அவரை அடியொற்றி,

'மெல்லெனச் சிவந்தது கீழ்த்திசைவானம்
மேனியைத் தொட்டது சீதளக் காற்று
நெல்வயல் எங்கணும் அசைந்தன பயிர்கள்
நீர்நிலையாவிலும் குதித்தன மீன்கள்
கல்லென நீதுயில் கொள்ளலும் தகுமோ?
கரும்புலி வீரனின்காவியம் விழுமோ?
இல்லையென்று ஆயிரம் வீரர்கள் எழுந்தார்
இளையவரே பள்ளி எழுந்திடுவீரே'

,என்று பாடுகிறார் புதுவை. இங்கு கவிதையின் தரத்தில், தெய்வக் கவி மணிவாசகருக்கும், மகாகவி பாரதிக்கும் நிகராக ஈழத்துக் கவிஞன் உயர்ந்து நிற்பதைக் காண் கிறோம்.

முந்தாநாள், தந்தை யானையைக் கொன்று களத்து ஒழியவும், முதல் நாள் கணவன் பெரும் வியூகத்தை உடைத்து மடியவும், அன்றும் தெருப் பறை கேட்டு விருப்புற்று மயங்கி, ஒரேஒரு மகனுக்கு வேல்கைக் கொடுத்துப் போர்க்களத்திற்கு அனுப்புகின்ற சங்கத்தமிழ் பெண்களைப் புறநானூறு காட்டுகின்றது

'அப்பன் மடிந்ததும் போர்க்களத்தில்-உந்தன்
அண்ணன் இறந்ததும் போர்க்களத்தில்
கக்கும் அனல்விழியோடெழும்பு-புலி
காட்டிய பாதையில் நீதொடர்வாய்'

என்ற எழுச்சித்தாலாட்டுப் பாடலைக் கேட்கும்போது இந்த ஞாபகம் வருகிறது. இவ்வாறு பற்பல இடங்களிற் புதுவை அவர்களும், காசிஆனந்தன், முவேயோ. வாஞ்சிநாதன் போன்ற பிற கவிஞர்களும் எழுதிய எழுச்சிப்பாடல்கள் பண்டைய இலக்கியங்களுக்கு நிகராக இருப்பதைக் காணலாம். ஆயினும் இக்கவிதைகளின் நோக்கம், மக்களை போராட்டத்திற்கு ஈர்ப்பதே அன்றி இலக்கிய இன்பம்தருவதன்று. கம்பன் விழாக் கவியரங்கம் ஒன்றிலே புதுவை அவர்கள்,

'ஆ தின்னத் தின்ன அலுக்காது என்றறிந்து
பா தின்னத் தின்ன பலபேர் வருவார்கள்
ப, சின்னச் சின்னப் பூவெல்லாம் புயலாகிச்
சா தின்னத் தின்னச் சமர்க்களத்தில்
- ஆடுகையில்
தீ வண்ண வண்ணச் சிவப்பாகும் காலத்தில்
ஆ தின்னத் தின்ன அலுக்காது என்றறிந்து
பா தின்னத் தின்னப் பலபேர் வருகின்றீர்'

என்று கூறியதில் இருந்து இலக்கிய இன்பத்திற்கு அவர் முக்கியத்துவம் தராதது புலப்படுகிறது. வானதி, கஸ்தூரி போன்ற போராளிக் கவிஞர்களும், ஏறத்தாழ இதேவிதமான கருத்துக்களுடன், புதுக்கவிதை நடையிலே கவிதைகளை எழுதியுள்ளனர்.

யுத்தத்தினால் ஏற்படும் அழிவுகளையும் துன்பங்களையும் பாடிய கவிஞர்களுக்குள்ளே கவிஞர் சோ. பத்மநாதன் அவர்களுடைய பங்களிப்பு மிகக் காத்திரமானது. இவரது 'வடக்கிருத்தல்' என்னும் கவிதைத் தொகுப்பு வடக்குச் சமூகத்தின் இரத்தம் தோய்ந்த ஆன்மாவைப் படம் பிடித்துக் காட்டுகிறது. 'ஏன், எதற்காக, யாரால் இந்த அழிவுகள்?' என்ற கேள்வியை ஒவ்வொரு சராசரித் தமிழ்க் குடிமகனும் போலக் கவிஞர் பல இடங்களில் எழுப்புகிறார்.

'இனவாத விதை இங்கு யார்தூவினர்கள்?
எரியென்றும் உடையென்றும் யார்
- ஏவினார்கள்?
சினமான செந்தீயை யார் மூட்டினார்கள்?
திருநாட்டை எரியூட்டி யார் காட்டினார்கள்?

என்று கவிஞர் கேட்கிறார்.

'என் முதுகில், என் தந்தை முதுகில்,
- அதன்முன்னம்
என் பாட்டன் முதுகிலெல்லாம் ஏறிநின்ற
- கூட்டம்
சொன்னதையும் செய்வதையும் இனி ஒப்புக்
- கொள்ளேன்
துயில் எழுந்தேன் விடுதலைப் பூபாள
- இசைகேட்டு'

என்று வீறுகொண்டு எழவும் அவர் தவறவில்லை.

ஒரு சாதாரண ஈழத்தமிழனைப் போல, துயரங்களை இறைவனிடம் கூறி ஆறுதல் தேடும் பாங்கும் இவர் கவிதைகளில் வெளிப்படுகிறது.

'குண்டு மழைபோலவந்து பொழிவேளை
குஞ்சு குருமான்களோடு காதல்
கொண்டமனை தாயர் தந்தை கிளைதோழர்
என்ற உறவேதும் நிலையாது
பஞ்சுபடும் பாடு கொஞ்சமல்ல நாளும்
நொந்துவருவார்கள் துயர்காண
நெஞ்சுருகும் ஆறிநின்றொருசொல் கூறு
முன்வரு விமானம் பலிகோரும'

'எங்கள்உடல், வீடு, எங்கள் தொழில், வாழ்வு, எங்கள உயிர் ஏதும் எமதாமோ, என்றநிலைமாற இந்த இடர்தீர என்று மயில்ஏறி வருவாய் நீ' எனறு நல்லைமுருகனை நோக்கி இவர் பாடுகின்ற திருப்புகழ், அருணகிரியாரின் திருப்புகழை ஒத்த இலக்கிய நயத்துடன் மிளிர்கின்றது.

சிறுசிறு சம்பவங்கள், சிறுசிறு காட்சிகள் இவரது கவி உள்ளத்தை தொட்டதனால் அருமையான கவிதைகள் பிறந்திருக்கின்றன. தாயைக 'கரியரில்' இருத்தி மூச்சுவாங்கச் 'சைக்கிள்' உழக்கும் சின்னஞ்சிறு பூவைக்கண்டு உருகியவர்,

'சின்னக்காலின் வலுவையெல்லாம் சேர்த்து
- வலித்தே உழக்குகிற
உன்னைத் தெருவிற் காண்கையிலே
உள்ளம் பாகாய் உருகுதடி
அண்ணன் அயல்நாடு அலைகின்றான்.
அப்பன் ஷெல்லால் அடியுண்டான்
பெண்ணே நீயோ இங்கிருந்து
பெரிய சுமைகள் சுமக்கின்றாய'

என்று பாடுகிறார். வைத்திய சாலை நடைபாதையில் நடக்கும் போது எதிரேவந்த, ரண காயமடைந்த பெண்போராளியைக் கண்டு அதிர்ந்தவர் கூறுகிறார்.

'ஓரிளம்பெண் தோளில் தலைசாய்த்து மற
- றொருத்தி
நேரெதிரில் வந்தாள். நிமிர்ந்தேன் திடுக்
- கிட்டேன்
பாதிக்கை இல்லை. விகாரமுகத் தழும்பு
ஏதுக்கும் அஞ்சாஇயல்பு இளமைக்கனவுகளைத்
தூரஒதுக்கிச் சுதந்திரத்திற்கான பெரும்
போரில் உடலைப் புடம்போட்டெடுத்தவளின்
அந்த விகாரமுகமே அடிக்கடி, என்
சிந்தையாய் வெள்ளித்திரையில் தெரிவதனால்
முற்றாய் எனது முகம மறந்துபோயிற்று'

கூறகக கூற வாயூறும் அமர கவிதை இவரது தமிழ்க்கவிதை. கவிஞர் முருகையன் அவர்களது கவிதைகளும் சுவைக்கத் தகுந்தவை. அடக்குமுறையை எதிர்த்து

'பொறுமைக்கும் வரம்புண்டு ஐயா,
போட்டிக்கும் எல்லையுண்டே,
அறமென்றும் நீதியென்றும்
அரும்பொருள் இன்னும்உண்டே'

என்று இவரது கவிதை பேசுகிறது. ஆயினும் போருக்கெதிரான இவரது உணர்வு 90களில் வெளிவந்த 'மனவடு' நூலில் பிரசுரிக்கப் பட்ட இவரது கவிதையில் தெளிவாகப் புலப்படுகிறது.

**நாடகங்கள்**

நாடகம் ஒரு கட்புலக் கலை என்பதனால், சொல்லவந்த செய்தியை மிக அழுத்தமாகக்கூறும் ஆற்றல் அதற்கு இருக்கிறது. எனவே விடுதலைப் போராட்ட உணர்வை மக்களுக்கு ஊட்டுவதற்கான கருவியாக நாடகம் பரவலாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது. இவ்கையில் உயிர்த்த மனிதர்கூத்து, சந்தனக் காடு, இலங்கைமண் பேன்ற நாடகங்கள் மிகப் பரந்தளவிலான கவனிப்பைப் பெற்றன. வீதி நாடகங்களும் தெருக்கூத்துக்களும் நூற்றுக்கணக்கில் அரங்கேற்றப் பட்டன. இவ்வகைப்பட்ட நாடகங்களில் பலவற்றிற்கு எழுத்துஒன்று இல்லாமையினாலும், இருந்தாலும் அதன் இலக்கியத்தரம்குறித்துக் கவனம் எடுக்கப்படாமையாலும், இவற்றை 'இலக்கியங்கள்' என்ற வகைக்குள் அடக்கலாமா என்பது விவாதத்திற்குரியது.

போரின் துயரைக்கூறுகின்ற நாடகங்களை எழுதியவர்களுள் குழந்தை ம.சண்முகலிங்கம் மிகவும் காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளார். இவரது 'அன்னையிட்ட தீ', 'எந்தையும் தாயும்' ஆகிய நாடகங்கள் மேடையிலே பெருவெற்றி பெற்றது மாத்திரமன்றி இவரின் எழுத்துக்களும் சிறந்த இலக்கியங்களாக மிளிர்கின்றன.

கோகலா மகேந்திரனின் நாடகங்கள் யதார்த்த நாடகத்திற்கு அப்பால்சென்று போரின் அழிவுகளைச் சித்தரிக்கன்றன. கவிஞர் சோ.ப.அவர்களின் 'பௌர்ணமி நாள்' என்ற தமிழர் வரலாற்றைக் கூறும் நெடுங் கவிதையை இவர் நாடகமாக அளித்துள்ளார். இவரது 'குருவி கூவ மறந்ததோ' எனும் நாடகம் இடம்பெயர்ந்த மக்களின் அவலங்களை உணர்வு பூர்வமாகச் சித்தரிக்கின்றது. இவை தவிர யாழ்.பல்கலைக்கழக மருத்துவ, விஞ்ஞான, கலைப்பீட நாடகப் போட்டிகளுள் மேடைஏற்றப்பட்ட நாடகங்களும், 'மேடை நாடகங்கள்' என்ற வகையிலே விதந்துரைக்கத் தக்கவை. ஆயினும், 'இலக்கியங்கள்' என்றவகையில் அவற்றை ஆராய வேண்டுமா என்பதுவிவாதத்திற்குரியது.

**கட்டுரைகள்இவிவரணங்கள்**

போர்க்காலச் சூழ்நிலையிலே மக்களினதும் போராளிகளினதும் வாழவை மையமாகக்கொண்டு எழுதப்பட்ட கட்டுரைகள், பயணக் கட்டுரைகள, உரைச்சித்திரங்கள் என்பனவும் சிலவேளைகளில் இலக்கிய அந்தஸ்து பெற்றுத் திகழ்வதை அவதானிக்கலாம். மலரவன் அவர்கள் எழுதிய 'போர் உலா' இவ்வகையிற் குறிப்பிடத்தக்கது. மாங்குளம் முகாம் தாக்குதல் நடந்த காலத்தைப் பின்னணியாக வைத்து ஒரு போராளியின் வாழ்வும் பயணங்களும் இந்நூலில் நயப்பட விவரிக்கப்பட்டுள்ளன. 'முரசொலி' பத்திரிகையில் எழுதப்பட்ட விவரணக்கட்டுரைகளும், மாவீரர் நினைவாக 'ஈழநாதம்' பத்திரிகையில் வெளிவந்த ஆக்கங்களும் இதேபணியில் 'களத்தல்', 'விடுதலைப்புலிகள்', 'சுதந்திரப் பறவைகள்' போன்ற பத்திரிகைகளில் வெளிவந்த ஆக்கங்களும் இவற்றுள்அடங்கும்.

**வரலாற்றுச் சித்திரங்கள்**

தமிழ்த்தேசிய உணர்வு எழுச்சி பெற்றமையால் ஈழத்தமிழரின் வரலாற்றை ஆராய்வதிலும், அவ் வரலாறுக் களங்களைப் பின்புலமாகக் கொண்டு இலக்கியம் படைப்பதிலும் இக்காலப்பகுதியில் புத்தார்வம் உண்டாயிற்று. கவிஞர் மாவை சச்சிதானந்தன் எழுதிய 'யாழ்ப் பாணக்காவியம்' இவ்வகையில் மிக முக்கியமானது. கோட்டைஅரசன் 6ஆம் பராக்கிரமபாகுவின் காலத்தில் அவனது வளர்ப்புமகன் சண்பகப் பெருமாள் தலைமையில் சிங்களச் சைனியம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும், நல்லூர் எரிந்ததும் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் தென்னிந்தியா சென்று படைதிரட்டிவந்து யாழ்ப்பாணத்தை மீட்டதும் இந்நூலில் வர்ணிக்கப்பட்டுள்ளன.

செங்கை ஆழியான் எழுதிய 'குவேனீ நாவலும் குறிப்பிடத்தக்கது. இலங்கையின் ஆதிக்குடிகளைப பற்றி இந்நாவல் வித்தியாசமான கண்ணோட்டத்துடன் ஆராய்கிறது. இவ்வாறான வேறுபல முயற்சிகளும நடைபெற்றுள்ளன.

**முடிவுரை**

மொத்தத்தில் போர்க்காலச் சூழ்நிலையானது, தொண்ணூறுகளில் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு புதிய உந்துசக்தியை அளித்திருப்பதையும், புத்தம்புதிய வடிவங்களும் புத்தம்புதிய பார்வைகளும் தோன்றி வளர்ந்திருப்பதையும் பார்க்க முடிகிறது.

எழுத்தாளர்கள் இலக்கியம் படைத்துத் தமது துன்பங்களுக்கு வடிகால்தேடிய அதேவேளை, அவர்களது பாத்திரங்களுடன் தங்களை ஒப்பிட்டுப்பார்த்து வாசகர்கள் ஆறுதல் அடைந்திருக்கிறார்கள். இவற்றினுள், கலையம்சமும்தரமும் மிளிரும்படி படைக்கப்பட்ட போர்க்கால இலக்கியங்கள் தமிழ் இலக்கிய வானில் நின்று நிலைத்துக் காலத்தால் அழியாத பேரிலக்கியங் களாகத் திகழும் என்பது உறுதி. □

## புற்றுநோய் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து வருகைதரவுள்ள புற்றுநோய் வைத்திய நிபுணர், இம்மாதம் 22, 23ஆம் திகதிகளில் தெல்லிப்பழையில் அமைந்துள்ள புற்றுநோய்ச்சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைகளை வழங்கவுள்ளார். (உ)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வேலணைப்பிரதேசசபையும், மகளிர் அபிவிருத்திநிலையமும் இணைந்து நடாத்தும் 'உள்ளூராட்சி நிர்வாக கட்டமைப்பில் சமூக மேம்பாடும் பெண்களும்' எனும் தலைப்பிலான கருத்தரங்கு நாளை வெள்ளிக் கிழமை பி.ப.1.30மணிக்கு வேலணை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் செ.சண்முகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், சிறப்பு விருந்தினர்களாக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ம.பாஸ்கரன், வேலணைப் பிரதேச செயலக உதவி அரசாங்க அதிபர் எஸ்.லோகநாதன், யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கயல்விழி ஆகியோரும், பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் ரீ.வீ.கிருஸ்ணசாமியும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-8)

## நூலகக் கண்காட்சி

(பளை)

உள்ளூராட்சி வாரத்தையொட்டி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினரால், நாளை வெள்ளிக்கிழமை மு.ப.10மணிக்கு புலோப்பளை உப அலுவலக பொது நூலகத்தில் நூலகக் கண்காட்சி நடாத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக கிளிநொச்சி அரசஅதிபர் சி.இராசநாயகம் கலந்துகொள்ளவுள்ளார். (உ-9)

## அரியாலை நெடுங்குளம் பகுதி

# மனிதப் புதைகுழிகளை அகழும் பணி இம்மாத இறுதியில் ஆரம்பம்?

## கண்ணிவெடிகளை அகற்றும் பணி மிகத்துரிதம்

(யாழ்ப்பாணம்)

**அரியாலை நெடுங்குளம் பகுதியில் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் இடங்கள் இம்மாத இறுதிப்பகுதியில் அகழ்வு செய்யப்பட்டு உண்மை நிலை உறுதிப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

மேற்படி நெடுங்குளம் பகுதியில் கண்டி வீதி அருகில் 514வது படைப் பிரிவை அண்மித்த இடத்தில் உள்ள வெற்று நிலப்பரப்பில் மூன்று இடங்களில் மனிதப் புதைகுழிகள் இருக்கக்கூடும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த நிலப்பரப்பில் ''ஹலோட் ரஸ்ட்'' என்ற வெளிநாட்டு அமைப்பு கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டு வந்தது.

இந்தப் பணியில் ஈடுபட்டு வந்தவாகள் தாம் மனித மண்டை ஓடு மற்றும் கை - கால் எலும்புகளை ஒத்த எச்சங்களை அவதானித்தாக கடந்த மாதம் யாழ். பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

இது விடயம் யாழ்.மாவட்ட நீதிபதிக்கு அறிவிக்கப்பட்டதற்கிணங்க, கண்ணிவெடியகற்றும் மேற்படி நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் சகிதம் சம்பந்தப்பட்ட இடத்திற்கு கடந்த 4ஆம் திகதியன்று சென்ற நீதிபதி இ.த.விக்னராஜா, அங்கு மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என்ற ஐயுறவை வெளிப்படுத்தினார்.

அத்துடன், புதைகுழிகளைத் தோண்டுவதற்கு ஏதுவாக சம்பந்தப்பட்ட பகுதியில் மிக அவதானமாகவும், துரிதமாகவும் கண்ணிவெடிகளை அகற்றுமாறும் அந்த நிறுவனத்தின் பணிப்பாளருக்கு உத்தரவிட்டிருந்தார்.



நெடுங்குளம் பகுதியில் துரிதமாக இடம்பெறும் மிதிவெடி அகற்றும் பணி

இதன் பிரகாரம் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் மிகவும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வேலைகள் இரண்டு வார காலத்தில் முடிவடையும் என முன்னர் தெரிவித்திருந்த போதிலும், சிலஇடையூறுகள் காரணமாக இம்மாத இறுதிப் பகுதிக்குள் முடிவடையும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, கண்ணிவெடிகள் அகழப்பட்ட பின்னர் புதைகுழிகளைத் தோண்டுவதற்கான திகதியைத் தருமாறு காலி வைத்தியசாலை சட்ட வைத்திய நிபுணர் றுவன்புரவுக்கு அறிவிக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்விதமிருக்க, மேற்படி பகுதியில் ஏற்கனவே மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டமை தெரிந்ததே. (உ-1)

---

## கடற்றொழில் அமைச்சருக்கு எதிராக மாபெரும் வீதிமறியல் போராட்டம்

(கொழும்பு)

கடற்றொழில் அமைச்சர் மகிந்த விஜயசேகர தனது அமைச்சின் செயலாளர் மன்னப்பெருமவை அவமதிப்பாக நடத்திய விவகாரத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் முன்னொருபோதும் இல்லாதவகையில் வீதிப்போராட்டமொன்றை நிர்வாகசேவை அதிகாரிகள் நடத்தவுள்ளனர்.

இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்தில் கடந்த வியாழக்கிழமை இதுபற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் விஜயசேகர-அதிகாரிகள் முன்னிலையில் சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரியான மன்னம்பெருமவை அவமதிக்கும் விதமாக ஏசியுள்ளார்.

இது நிர்வாக சேவை அதிகாரிகளை அச்சுறுத்திய ஒரு செயலாகும் என்று கூட்டத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இது தொடர்பில் ஜனாதிபதியோ, பிரதமரோ உரிய நடவடிக்கை எடுக்கத்தவறும் பட்சத்தில் இரு வாரங்களில் வீதிப் போராட்டங்களை நடத்துவதென்று முடிவுசெய்யப்பட்டது என்று சங்கத்தின் தலைவர் ரணுக்கே கூட்டத்தின் பின்னர் தெரிவித்துள்ளார். (உ)

## புலிகளுடன் பேசுவதன் மூலமே பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்

### பிரதி அமைச்சர் வசீர் சேகுதாவுத் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிப்பிரதிநிதிகளுடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை நடத்துவதன் மூலமே, முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என வீடமைப்புப்பிரதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளருமான வசீர் சேகுதாவுத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற காணிப்பகிர்வு பற்றிய உபகுழுக் கூட்டம் தொடர்பாக செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் சிதைவடைந்துள்ள நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்பும் பொருட்டு, இருதரப்பினரும் நல்லெண்ணங்களை வெளிப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாகவே தற்போது காணி தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. இப்பிணக்குகளிற்கு சுமுகமான தீர்வுகள் காணப்பட்டு வருகின்றன. இது போன்றே ஏனைய வற்றுக்கும் தீர்வு காணப்படும் எனஅவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## பச்சிலைப் பள்ளிப் பிரதேச கிணறுகளில் எறிகணைகள்

(பளை)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு அண்மையில் பிரதேச சபையின் முள்ளிப்பற்று 20அலுவலகக் கிணறு இறைத்துச் சுத்தம்செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த பிரதேச சபை உத்தியோகத்தர்கள் வெடிக்காத நிலையில் ஆட்லறி எறிகணைகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

மேற்படி உப அலுவலகக் கிணற்றை இறைத்தபோது கிணற்றினுள் புதைந்த நிலையில் காணப்பட்ட எறிகணை குறித்து உடனடியாக மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

இதனையடுத்து அவ்விடத்திற்கு வந்த மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் எறிகணையை மீட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இயக்கச்சி மண்டலாய்ப்பிள்ளையார் ஆலயக் கிணறு இறைத்துச் சுத்தம் செய்யப்பட்டபோது ஆட்லறி எறிகணை ஒன்றும், இயக்கச்சி கண்ணகை அம்மன் ஆலயக் கிணற்றில் இருந்து ஆட்லறி எறிகணைகள் இரண்டும் கண்டுபிடிக்கப்பட்டு மனிதநேயக்கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மீட்டுச்செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இதுவரைபயன்படுத்தப்படாத நிலையில் அப்பகுதியிலுள்ள ஏனைய கிணறுகளிலும் இதே போன்று எறிகணைகள் ஏராளமாக இருக்கலாம் என அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.(உ-97)


**யாழ்ப்பாண மாநகரசபை**

**அறிவித்தல்**

கீழ்க்காணும் இறைச்சிக்கடைகளுக்கு மீள்கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

1. குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல: 2,5
2. நரிகுன்று மாட்டிறைச்சிக்கடை இல: 1.
3. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல: 2.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில அறிந்து கொள்ளலாம்.

*மாநகரசபை,*
*யாழ்ப்பாணம்.* [C/6417] *இ.இராமலிங்கம்,*
*மாநகர ஆணையாளர்.*




அரியாலை நெடுங்குளம் பகுதியில் மனிதப்புதைகுழிகள் உள்ளதாகக் கருதப்படும் இடங்களில் காணப்படும் மனித எச்சங்கள்? (படங்கள் க.பவன்)

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல். -குறள்

வலம்புரி

## சொல்லும் செயலும் வேறானால்!

இஸ்ரேலிடம் நவீனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காகவே பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும், கடற்படைத் தளபதி தயா சந்தகிரியும் அங்கு சென்றுள்ளனர் என்ற செய்தி இப்போது வெளியாகியுள்ளது. பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இஸ்ரேலுக்கு மேற்கொண்ட விஜயம் ஆபத்தானது எனச் சுட்டிக்காட்டி கடந்த 12ஆம் திகதிய வலம்புரியில் ''பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேலுக்குச் சென்றது ஏனோ?'' என எழுதியிருந்தோம். இப்போது அமைச்சர் திலக் மாரப்பனவின் இஸ்ரேல் விஜயம் ஆயுதக் கொள்வனவுக்கானது என்பதை அந்நாட்டுப் பத்திரிகை ஒன்றே உறுதிப்படுத்தியுள்ளது.

ஒருபுறத்தில் சமாதானம் மறுபுறத்தில் ஆயுதக் கொள்வனவு எனில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான அரசை எவ்வாறு தமிழ் மக்கள் நம்பமுடியும். சமாதானப் பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதாக உலகுக்குப் பறைசாற்றிவரும் இலங்கை அரசு தனக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சாதகமாகப் பயன்படுத்தி உலக நாடுகளிடம் எதிர்பாராத அளவில் நிதியுதவியைப் பெற்றுள்ளது. இவ்வாறு சமாதானம் என்ற வார்த்தையூடாக உலக நாடுகளிடம் பெருந்தொகையான நிதியுதவியைப் பெற்றுக் கொண்ட இலங்கை அரசு உதவி பெற்ற கையோடு இஸ்ரேலிடம் ஆயுதக் கொள்வனவைச் செய்வதற்கு ஏற்பாடு செய்து வருகிறது. இது இலங்கை அரசின் போலித்தனத்தையும், கபடத்தனத்தையும் வெளிக்காட்டி நிற்கிறது. உலக நாடுகளிடம் கையேந்திப் பெற்றுக் கொண்ட நிதியை ஆயுதக் கொள்வனவில் ஈடுபடுத்தும் கொடூரச் செயலை உலக நாடுகள் கண்டும் காணாதது போல் இருப்பது விசித்திரமானது.


இனயுத்தத்தால் அகதிகளாக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையில் ஓர் திருப்புமுனையை ஏற்படுத்தாமல் - யுத்தத்தால் அழிந்துபோன இடங்களைப் புனரமைப்புச் செய்யாமல் மீண்டும் ஆயுதக் கொள்வனவு என்றால், நிலைமை எப்படி அமையும் என்பதை ஒருகணம் சிந்திப்பது இலங்கைத் திருநாட்டின் அழிவுப்பாதையை எண்ணிப்பார்ப்பதற்கு உதவுவதாக இருக்கும்.

வறுமையின் தாண்டவத்தால், உலகெல்லாம் பிச்சை எடுத்து வாழும் இலங்கை, பிறக்கும் குழந்தையின் தலைக்கும், இலட்சக்கணக்கான கடனைச் சுமத்திக்கொண்டு கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே இறக்கும் பிரஜைகள் இலங்கையர்கள் என்ற அவப்பெயரோடு நிற்கையில், மீண்டும் மீண்டும் ஆயுதக் கொள்வனவு என்றால், அரசின் சொல்லும், செயலும் வேறானால் இந்நாட்டில் மீண்டும் போர் மூழ்வது திண்ணமே.

# மறுபிறப்பை உறுதிப்படுத்தலாம் முடிவுகள் உறவுச்சிக்கலை உருவாக்கும்

மறுபிறப்பு பற்றிய எண்ணம் மரணத்தை எதிர்நோக்குபவர்களிலும் அன்புக்குரியவர்களின் இறப்பினால் பாதிக்கப்பட்டவர்களிலும் சாதாரணமாக இருக்கும். இந்துமதக் கலாசாரத்தில் சைவசித்தாந்தங்கள் மறுபிறப்புண்மையை கூறுகின்றன. புல்லாகி, பூண்டாகி... என்று மணிவாசகர் ''மறுபிறப்பைப் பற்றிக் கூறுகின்றார்.'' ''பிறவிப்பெருங் கடல் நீந்துவர்'' என மறுபிறப்பைப்பை திருவள்ளுவர் வர்ணிக்கிறார். மேலும் இன்று காண்டம் பார்த்தல் மூலம் கடந்த பிறப்பு உண்மைகளை சுவடிகளில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது.

விஞ்ஞானிகளும் மறுபிறப்பைப்பற்றி ஆராயத்தொடங்கிவிட்டனர். அதற்கு ஆதாரபூர்வமான அவதானங்களை சேகரிக்க முற்பட்டுள்ளனர். அந்தவகையில் ஆராய்ச்சியை நடத்திய பேராதனைப் பல்கலைக் கழக மருத்துவத்துறை சிரேஸ்ட பேராசியரும் நரம்பியல் நிபுணருமான டாக்டர் நிகால் செனனாயக்கா அவர்கள் சில ஆதாரங்களை எடுத்துக் கூறினார். அவற்றில் இரண்டு உதாரணங்கள். ஒரு சிறுமி தான் போன பிறப்பில் பிறந்த இடம், சகோதரர்கள், ஏன் இறந்தது என்பவற்றைக் கூறினாள். அதனை ஆராய்ந்தபோது அது உண்மையாகவும் அச்சிறுமி கூறிய தடயங்




Lifeflux (Astral body)

கள் சரியாகவும் இருந்தது. அதே போல் இப்பிறப்பில் நெஞ்சில் சில அடையாளங்களுடன் பிறந்த நபரது போன பிறப்பில் நெஞ்சில் துப்பாக்கிச் சூட்டுக்காயத்தினால் இறந்தார். இன்னுமொரு நபர் போன பிறப்பில் தலையில் துப்பாக் கிச் சின்னம் பட்டு இறந்தார். இப் பிறப்பில் தலையில் காய அடையாளம் இருந்தது. இவை மறுபிறப்பை ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டுகின்றன. ஆனால் எல்லாரது மறு பிறப்பையும் ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடியாது. மேலும் மறுபிறப்பு அல்லது கடந்த பிறப்பைப் பற்றி அறிவதால் பல உறவுச்சிக்கல்கள் உருவாகும்.

மறுபிறப்பின்போது ஒருவரது செய்தி எவ்வாறு கடத்தப்படுகின்றது எனபதற்கு பேராசிரியர் தற்காலக் கணனியை உபமானப்படுத்தினார். அதாவது ஒரு கணனியில் செய்திகள் எவ்வாறு சேமிக்கப்பட்டு உள்ளதோ அவ்வாறே ஒவ்வொரு உடலின் செய்தியும் சேமிக்கப்பட்டு கணனி வலைப்பின்னலுக்கு அனுப்பப் படுகின்றது.ஒரு கணனி அழிந்தால் எவ்வாறு அந்த தகவல்களை கணனி வலைப்பின்னல் மூலம் புதியஒரு கணனிக்கு வழங்கலாமோ அவ்வாறே உயிர்களின் செய்திகளும் ஒரு பிறப்பில் இருந்து மறுபிறப்பிற்கு கடத்தப்படுகின்றன.

இதனை விஞ்ஞான ரீதியாக விளக்கப் போதிய அவதானிப் புக்கள், எடுகோள்கள் தேவை.

ஆயின் ஆத்மாவிற்கு எவ்வாறு வடிவம் கொடுக்கலாம். இதற்கு பௌதீக வெளியையும் கணித வெளியையும் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பனவே வினாக்கள்.

இதற்கு உய்த்துணரும் முறையை உபயோகிக்கலாம். அதாவது மனம் மூளையின் கலங்களின் மின் அழுத்த மாற்றங்களால் ஏற்படுகின்றது. இவ் மின்னழுதத மாற்றங்கள் மின் காந்த அலைகளை உருவாக்கும். மனத்தின் வடிவை மின்காந்த அலைகளின் காலத்தின் சார்பாகக் கூறலாம். இது நான்கு பரிமாணங்களை உடையது. ஆதமா மனதின் சார்பாக பௌதீக வெளியில் காவிப் புலன்களின் சார்பாக மின்காந்த அலைகளாக அமையும்.

டாக்டர். சி.யமுனாநந்தா
இருதய சிகிச்சைப்பிரிவு,
தேசிய வைத்தியசாலை,
கொழும்பு.

# புலிகளின் எண்ணெய்க் கப்பலை கடற்படையினர்

# ரோந்துக் கப்பல் மூழ்கடித்தமை பிழையான வழிமுறை

## கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலிவ்சன் சாடல்

(கொழும்பு)

போர் நிறுத்த ஒப்பந்தம் கடந்த ஒன்றரை ஆண்டுகாலமாக அமுலில் இருக்கிறது. அதன்முன்னேற்றம் பற்றி நான் திருப்தியடையவில்லை. உதாரணமாக இறுதியாக கடலில் நடைபெற்ற சம்பவத்தைக் கூறலாம். அது பற்றி நான் ஒரு தீர்வை அறிவிக்கவில்லை. அந்தச் சம்பவம் தொடர்பில் இருதரப்பினரும் நடந்து கொண்ட விதம் பற்றி நான் திருப்திப்படவில்லை என்பதே அதற்குக் காரணம் என்று கண்காணிப்புக்குழுவின் தலைவர் ட்றிக்வி ரெலிவசன ஆங்கிலத்தினசரி ஒன்றுக்கு அளித்த செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது,

முல்லைத்தீவு மோதலின் பின், கடல் நடவடிக்கைகள் தொடர்பில் நாம் தெளிவானதும், காத்திரமானதுமான ஒழுங்குகளுக்கு வர வேண்டுமென்று கேட்டு இருதரப்புக்கும் கடிதம் எழுதினேன்.

நாம் சில பிரேரணைகளை அதில் முன்வைத்தோம். பிரேரணைகளை முன்வைக்காது விட்டால், பிரச்சினைகள் என்றும் தீரப்போவதில்லை. கடற்புலிகளைப்பற்றிப் பேசாதுவிடுவோமாயின் அது எப்பொழுதுமே பிரச்சினையாக இருக்கப்போகிறது என்பதே அர்த்தம்.

கடற்புலிகள் இருப்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். அவர்களடம் கப்பல்கள் இருப்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். அவர்களிடம் கப்பல்கள் இருப்பது எல்லோருக்கும் தெரியும். இது ஆயுத மோதலின் ஒரு அம்சமாக இருக்கிறது. இருதரப்பினரும்போர்நிறுத்த உடன்பாடு செய்ததற்குக் காரணம் ஆயுதமோதலாகும்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கடல் விலக்கி விடப்பட்டது என்பது ஒரு பிரச்சினையாகும். இலங்கையின் கடற்பரப்பில ரோந்து செல்வது, கப்பல்களை தடுத்து நிறுத்துவது சோதனையிடுவது ஆகியன பற்றிப் பிரச்சினையில்லை.

ஆனால், கப்பல்களை நீரில் மூழ்கடித்தல் வேணடும் என்பதுஅதன் அர்த்தமல்ல. நோர்வே நாட்டின் கடல் ரோந்துகக்ப்பல்களுக்கு ஆயுதமில்லை. ''ஹலோ நாம் உங்களுடன் பேச வேண்டும்'' என்று அறிவிப்பது மட்டுமே தேவை. இதனையே ஒரு கடற்படை செய்தல் வேண்டும். இவ்வாறு ரெலிவ்சன் தெரிவித்திருக்கிறார். (உ)

### இடைக்கால நிர்வாக சபை

## மனு எழுத்து மூலங்களை சமர்ப்பிக்க உத்தரவு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவதற்கு முன்னர் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மக்கள் கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்த வேண்டும் எனக் கோரும் மனுத் தொடர்பான எழுதது மூலங்களை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதனை எதிர்வரும் செப்ரெம்பர் 11ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதற்கு ஆட்சேபம் தெரிவித்த சட்டமா அதிபர் கே.சீ.கமலசபேசன அரசியல் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு மாத்திரமே இத்தகைய கருத்துக் கணிப்பை நடத்தும் அதிகாரம் உண்டென மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்

சேருவில ரஜ மகாவிகாரையின் பிரதமகுரு சங்கைக்குரிய ஸ்ரீ தருண கீர்த்திதேரர் உட்பட 10 பேர் இம் மனுவை தாக்கல் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. (தி)

# பல்கலை ஊழியர் இன்று வேலை நிறுத்தம்

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக ஊழியா சம்மேளனம் இன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை நடாத்தவிருக்கிறது.

20அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நடாத்தவிருக்கும் இப்போராட்டத்தில்,யாழ்.பல்கலைக் கழகம் உள்ளிட்ட இலங்கை முழுவதிலும் உள்ள பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

1995க்கு பிறகு சம்பள உயர்வு இல்லாமை, பிரிவு 755இன் பிரகாரம் ஏற்படும் சம்பள முரண்பாடு, மாதாந்த இழப்பீட்டு படியில் குறைப்பு, தனியார் மயமாக்கல் ஆகியவற்றைக் கண்டித்தும், சேவைமூப்புக்கேற்ப தரஉயர்வு வழங்குதல், சம்பள நிர்ணய குழு நியமனம், அமைய ஊழியர்களை நிரந்தரமாக்குதல், இடர்கடனுக்கு நிதி வழங்குதல், ஓய்வூதிய திட்டத்தின் சலுகைகளை மீளாய்வு செய்தல், இடமாற்ற சபைகளை உருவாக்குதல், ''கல்விசாரா'' பதத்தினை மாற்றுதல், உள்ளக பதவியுயர்வு வாய்ப்பினை அதிகரித்தல், பொதிசுற்று நிருபம் போல் ஓய்வு பெறும் வயதை அதிகரித்தல், பல்கலைக்கழக தாபனக் கோவையினை திருத்திப் பதிப்பித்தல், 10% சம்பள அலவனஸ் வழஙகுதல், 15வருடசேவை மூப்புடையோருக்கு ஒரு வருட கற்றல் விடுமுறை வழங்குதல், ஓய்வு பெற்றோருக்குரிய கொடுப்பனவினை வங்கியில் வைப்பிலிடும் போது வரிச்சலுகை வழங்குதல், 30வீதம் கல்விப்படி போன்று வழங்குதல், 1995 ரிவிரெச நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த ஊழியர்களுக்கு விசேட விடுப்பு வழங்குதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்த அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. (உ-10)

### துறைமுக அதிகார சபை ஊழியர்

## மனித உரிமைகள் மீறல் மனு நீதிமன்றில் விசாரணைக்கு

(கொழும்பு)

துறைமுக அதிகார சபை ஊழியா களுக்கு வேலைகளை பகிர்ந்தளிக்கும் நடைமுறையில் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளவா என்பதை உயர்நீதிமன்றம் விசாரணை செய்யவுள்ளது.

அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தாக்கல் செய்த மனுவை விசாரிக்க நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

இது சம்பந்தமான ஆட்சேப மனுக்களை தாக்கல் செய்யுமாறு துறைமுக அதிகார சபைக்கும், அதன் அதிகாரிகளுக்கும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சகல தகைமைகள் இருந்தும் கூட தமக்கு வீடுகள் வழங்கப்படாததன் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (தி)

## சாயி அருளமுதம்



நமது பிள்ளைகள் குடி, சூதாட்டம் எனும் தீய பழக்கங்களில் ஈடுபடும் பொழுது அவர்கள் மீது அன்பைச் சொரியும் பெற்றோரை, நான் அறிவேன். கடைத்தெருவில் தள்ளாடிக் கொண்டு போவோர் வருவோரைப் பரிகாசம் செய்து பயமுறுத்தும் போது அவர்களைப் பெற்றோர் கண்டிப்பதில்லை. மற்றவர்களுக்குச் சொந்தமான சொத்துக்களை எவ்வளவு தூரம் கனம்பண்ணி நடக்க வேண்டுமென்பதை அந்தப் பிஞ்சு மனங்களில் பெற்றோர் பதிய வைப்பதில்லை. இதன் விளைவாக பிள்ளைகள் பெரும் இன்னல்களுக்கு உட்படும்போது, பச்சாதாபமடைந்து எண்ணித் தங்களைத் தாங்களே சபித்துக் கொள்வர்.

நன்றி
நாளாந்த சிந்தனை

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# இந்து கலாசார அமைச்சினால் சீநோர் பொறுப்பேற்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடகடல் நிறுவனம் (சீநோர்) உத்தியோக பூர்வமாக இந்து கலாசார அமைச்சினால் நேற்று பொறுப்பேற்கப்பட்டது.

நிறுவனத்தைப் பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. நிகழ்வில் அமைச்சர் மகேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

அங்கு உரையாற்றிய அமைச்சர், சீநோர் நிறுவனத்தை புனர் நிர்மாணம்" செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும் அதன் உண்மை நிலை குறித்தும் பிரதமருக்கு விளக்கியதன் பேரில் அந்நிறுவனத்தை பிரதமர் எனது அமைச்சின் கீழ் கொண்டு வந்தார். அதன் மூலம் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு உதவமுடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்து கலாசார அமைச்சின் மேலதிக செயலாளர் கே.பரமலிங்கம் நிறுவனத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை குருநகர்ப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கான கூரை ஓடுகளையும் அமைச்சர் வழங்கினார். (த)

## ஆயுதக்....

எனினும் இவ்வாறான சம்பவம் இடம் பெற்றதற்கான ஆதாரம் எதுவும் இல்லை என இராணுவத்தினர் தெரிவித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

சமாதானமுயற்சிகளுக்கு எதிரான அரசியல் கருத்துக்களை கொண்டிருக்கும் சில தீயசக்திகள் மூலம் மேற்படி செய்தி வெளியானதா? என்பது குறித்து ஆராய்ந்து வருவதாக ஒஸ்ரின் பெர்னான்டோ கூறியுள்ளார்.

இதேவேளை வெடிமருந்துகள் பொருத்தப்பட்ட லொறி ஒன்று கொழும்பு நகருக்குள் ஊடுருவியதாக வதந்திகள் ஏற்கனவே பரப்பப்பட்டிருந்தாதகவும் அவர் மேலும் தொரிவித்துள்ளார்.

## ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஊரக தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கான ஒன்று கூடல் நாளை மாலை 3.30 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். இவ் ஒன்றுகூடலில் பிரதேச, ஊரக தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந-5)

## விசேட சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேசத்துக்குட்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகளுக்கானவிசேட சந்திப்பொன்று நாளை மாலை 4.00 மணிக்கு கோப்பாய் அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.(ந-5)

## என்.கே.பத்மநாதனின் இறுதிக்கிரியை இன்று

(யழ்ப்பாணம்)

நாதஸ்வர மேதை கலாசூரி என்.கே.பத்மநாதனின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறும். யாழ்ப்பாணம் கில்னர் லேனில் உள்ள அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். (ந)


## இடைக்கால...

ஒத்ததாகும் என்பது குறித்து அரசு தரப்பில் இருந்து எதுவும் தெரிவிக்கப்படாதநிலையில் திட்டவரை பைவன்னிக்கு எடுத்துச் செல்லும் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கிடம் இடைக்கால நிர்வாகத் திட்டம் தொடர்பாக எமது செய்தியாளர் கேட்டபோது;

திட்டவரைபு தொடர்பாக எந்த விதமான கருத்தையும் நான் கூற விரும்பவில்லை, கருத்துக்களைக் கூறி பேச்சுவார்த்தைகளை குழப்பும் நோக்கம் நோர்வேக்கில்லை என்றும் தெரிவித்தார்.

இதேவேளை முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூக் ஹக்கீம் பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவை சந்தித்து இடைக்கால நிர்வாக கட்டமைப்பில் முஸ்லிம்களின் நிலைப்பாடு தொடர்பான விடயங்களை எடுத்துக் கூறியுள்ளதாகவும், இடைக்கால நிர்வாக சபையில் முஸ்லிம் மக்களின் சமபலம் குறித்து கட்சியின் உயர் பீடம் தற்போது ஆராய்ந்து வருவதாகவும் ரவூப் ஹக்கீம் தொரிவித்துள்ளார். (ம)

### இசைநாதம் ஒன்று அசைவற்றுக் கிடக்கிறது



நாதஸ்வர மேதை என்.கே.பத்மநாதனின் புகவுடல் அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

# நாதஸ்வரச் சக்கர வர்த்தியை நாம் இழந்து விட்டோம்

## ஆதீன முதல்வர் இரங்கல் செய்தி

(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் புகழ் பூத்த மங்கள வாத்தியக் கலைஞர்களில் தனக்கென தனியானதொரு இடத்தைப் பெற்றவர் நாதஸ்வர வித்துவான் கலாநிதி பத்மநாதன். அவருடைய மறைவு ஈவ்வகையிலும் ஈடுசெய்யமுடியாதது. இவ்வாறு நாதஸ்வர வித்துவான் பத்மநாதனின் மறைவு குறித்து நல்லை ஆதீன முதல்வர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில். தெரிவிக்கப்பட்டுள்ளது;

அச்செய்தியில் கலையுலகில் தனது பணியை நிறைவுறச் செய்து எல்லோருடைய நன்மதிப்பையும் தனதாக்கிக் கொண்டவர் பத்மநாதன் உளளாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் தனது திறமையை மிளிரச் செய்துள்ளார். இவரது திறமையைக் கண்டு அரசாங்கம் அவருக்கு கலாசூரி விருதினை வழங்கிக் கௌரவித்தது.

நாதஸ்வரச் சக்கர வர்த்தியாகத் திகழ்ந்த இவரது மறைவு அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. அவருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## காரைதீவில் வான் கடத்தல்

(மட்டக்களப்பு)

அக்கரைப் பற்றிலிருந்து மட்டக்களப்பு ஊடாக கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த வான் ஒன்று மட்டக்களப்பு காரை தீவில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளினால் கடத்தப்பட்டுள்ளது.

வாகனச் சாரதியும் பயணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளதாக சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடத்தப்பட்ட வாகனம் 12 இலட்சம் ரூபா பெறுமதியானது என பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டிலிருந்து கொழும்புக்கு வந்தவர்களை ஏற்றுவதற்காகவே வான் கொழும்பு நோக்கிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# சீலன் நினைவுத்தூபி மீசாலையில் திறப்பு

(தென்மராட்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களான லெப். சீலன் (லூ.சாள்ஸ் அன்ரனி-திருகோணமலை), வீரவேங்கை ஆனந்த் (இ.அருள்நாத்-மயிலிட்டி) ஆகியோரின் நினைவுத் தூபி நேற்று முன்தினம் மீசாலையில் திறந்து வைக்கப்பட்டது.

தென்மராட்சியிலுள்ள மீசாலை அல்லாரையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளமபரிதி நினைவுத் துாபியை திரைநீக்கம் செய்து வைத்தார்.

இதற்கு முன்பாக இடம்பெற்ற நிகழ்வில் பொது ஈகச் சுடரினை வரணி மகாவித்தியாலய அதிபரும் மாவீரரின் தந்தையுமான எம்.நவரட்ணராஜா ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக கொடியை தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வின் போது மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா, சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் எஸ்.பாலச்சந்திரன் ஆகியோர் மாலை அணிவித்தனர். (உ-77)


## ஆழ்ந்த அனுதாபங்கள்

மறைந்த நாதஸ்வர மேதை கலாசூரி

**என்.கே.பத்மநாதன்**

அவர்கள் எங்கள் குழுவின் இறைபணிக்கு ஆற்றிய சேவைகளை நன்றியுடன் நினைவுகூர்ந்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சைவசமய விவகாரக் குழு,
யாழ். மாநகராட்சி மன்றம்

(C/6418)



உ

தில்லைக்கூத்தன் துணை

## எம் கலைமகனே பத்மநாதா



*நல்லை திருவீதியில் ஒலித்த*
*நாதம் ஓய்ந்ததுவோ*
*கல்லையும் உருக்கும் கனிவான*
*கானம் காற்றினில் மறைந்ததுவோ*
*எங்கு சென்றீர் எம்*
*கலைமகனே பத்மநாதா*

K.K.K.ஸ்தாபனம்,
யாழ்ப்பாணம்,
காரைநகர்.


## மரண அறிவித்தல்

**கந்தசாமி பத்மநாதன்**

**(நாதஸ்வர கான கலாநிதி, கலாசூரி)**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பத்மநாதன் 15.07.2003 செவ்வாய்க் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி பரிமளம் தம்பதிகளின் அருமை மகனும் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் ரவீந்திரன், கலைவாணி, கிரிதரன்(கிரிஷன் வீடியோ சென்ரர்) ரஞ்சினி, கனகாம்பரி(ஆசிரியை யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலயம்) காலஞ்சென்ற முரளிதரன், மற்றும் பாலேந்திரன் (யாழ்.ஜெயப்பூர் நிறுவனம்) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் கலைச்செல்வி, சிவகுருநாதன், சிவபுரத்தரசி, (ஆசிரியை, கொட்டடி நமசிவாய வித்தியாலயம்) முருகபூபதி, சிவனேஸ்வரநாதன் (ராஜீஇன்டஸ்றீஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அர்ஜூன்,வைஷ்ணவி,அபிராம்,விஜித்தா, ஆர்த்திகா,ரஜித்தா,சண்முககேசன்,சகானா,கீர்த்தனா,கௌதமன், ராகப்பிரியா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற வரதலட்சுமி இரத்தின சபாபதி மற்றும் கமலாம்பிகை, பாலசுப்பிரமணியம், வினாயகமூர்த்தி, சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 17.07.2003 வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

199/4 கில்னர் ஒழுங்கை,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம். T.P-222 3323 (7269)

தகவல்:-
குடும்பத்தினர்.


# நாதஸ்வரச் சக்கரவர்த்திக்கு எமது இதய அஞ்சலி



நாதஸ்வரச் சக்கரவர்த்தி

**என்.கே.பத்மநாதன்**

அவர்களின் பேரிழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சி.நேசேந்திரன் குடும்பத்தினர்
ச.ஆ.பாலேந்திரன் குடும்பத்தினர்
திருமதி இராசமலர் நடராசா

விளாணை,
காரைநகர்.


இப்பத்திரிகை வலம்புரி